## அலகு – 3

## TT0103 மொழியின் அடிப்படைத்திறன்கள்

### இந்த அலகு என்ன சொல்கிறது?

மொழியைக் கற்பதற்கான முதல்படி அடிப்படைத் திறன்களைப் பெறுதல் ஆகும். இவ்வடிப்படைத் திறன்களைக் கற்கும் பொழுது தம் எண்ணங்களை உருவாக்குவதற்கும், உருவாக்கியதைத் தம்முள்ளும் பிறருள்ளும் பதிப்பதற்கும் பயனுடையுள்ளதாக உள்ளது. அவ்வடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய திறன்களையும், இத்துடன் மொழிபெயர்த்தலையும் மொழியாக்கத்தையும் மாணவர்களிடம் வளர்ப்பது குறித்து இவ்வலகு எடுத்துரைக்கின்றது.

### இந்த அலகைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- கேட்டல் திறன் வளர்க்கலாம்.
- பேசுதல் திறனை உண்டாக்கலாம்.
- படித்தல் திறனுக்குப் பயிற்சி அளிக்கலாம்.
- எழுதுதல் திறனைப் பழகலாம்.
- படைப்பாற்றல் திறனை வளர்க்கலாம்.
- மொழிபெயர்த்தல் மற்றும் மொழியாக்கத் திறனை வளர்க்கலாம்.

| | பாட அமைப்பு |
|---|---|
| 3.0 | **பாட முன்னுரை** |
| 3.1 | **கேட்டல் திறன்** |
| 3.1.1 | கேட்டல் திறனின் நோக்கம் |
| 3.1.2 | கேட்டல் திறன் நிலைகள் |
| 3.1.3 | கேட்டல் சூழல்களின் இயல்புகள் |
| 3.1.4 | கேட்டல் திறக் கூறுகள் |
| 3.1.5 | கேட்டல் திறனை வளர்க்கும் வாயில்கள் |
| 3.1.6 | பழகு செயல்பாடுகளின் வகைகள் |
| 3.1.7 | கேட்டல் திறனின் பயன்கள் |
| 3.2 | **பேசுதல் திறன்** |
| 3.2.1 | பேசுதல் திறனின் நோக்கம் |
| 3.2.2 | பேசுதலின் தன்மைகள் |
| 3.2.3 | பேசுதல் திறன் வளர்க்கும் செயல்பாடுகளில் கவனிக்கத்தக்கவை |
| 3.2.4 | பேசுதல் செயல்பாடுகள் |
| 3.2.5 | பேசுதல் திறனைத் தேர்ந்தறியும் முறைகள் |
| 3.2.6 | பேசுதல் திறனில் பயிற்சி |
| 3.2.7 | திருந்திய பேச்சின் நல்லியல்புகள் |
| 3.2.8 | பேசுதல் திறனின் பயன்கள் |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – I** |
| 3.3 | **படித்தல் திறன்** |
| 3.3.1 | படித்தல் திறனின் நோக்கம் |
| 3.3.2 | படித்தல் திறனை வளர்க்கும் முறைகள் (கற்பிக்கும் முறைகள்) |
| 3.3.3 | படித்தல் திறனின் வகை |
| 3.3.4 | படிப்பை மேம்படுத்தும் வழிமுறைகள் |
| 3.3.5 | படித்தலைத் தேர்ந்தறியும் முறைகள் |
| 3.3.6 | படித்தலின் நோக்கங்கள் |
| 3.3.7 | படித்தல் முறைகளும் நிலைகளும் |
| 3.3.8 | படித்தல் திறனின் பயன்கள் |
| 3.4 | **எழுதுதல் திறன்** |
| 3.4.1 | எழுதுதல் திறனின் முறைகள் |
| 3.4.2 | எழுதுதல் திறனின் பயிற்சி |
| 3.4.3 | நல்ல கையெழுத்தின் இயல்புகள் |

| | பாட அமைப்பு |
|---|---|
| 3.4.4 | எழுதுதல் திறனின் பயன்கள் |
| 3.5 | **மொழிபெயர்ப்பும் மொழியாக்கமும்** |
| 3.5.1 | மொழிபெயர்த்தல் |
| 3.5.2 | மொழிபெயர்ப்பு நிலைகள் |
| 3.5.3 | மொழிபெயர்ப்பு வகைகள் |
| 3.5.4 | மொழியாக்கம் |
| 3.5.5 | மொழியாக்க முறைகள் |
| 3.5.6 | மொழியாக்கப் பண்புகள் |
| 3.5.7 | மொழியாக்கத் திறனை வளர்க்கும் முறைகள் |
| 3.6 | **தொகுப்புரை** |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – II** |

## 3.0 பாட முன்னுரை

மாணவர்களின் மனநிலை அறிந்து, அவர்களுக்கு ஆசிரியர்கள் மொழியைக் கற்பிக்க வேண்டும். மொழிப்பாடம் கற்பித்தலின் அடிப்படை நோக்கம் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய திறன்களை மாணவர்களிடம் வளர்ப்பதே ஆகும். இவ்வடிப்படைத்திறனுடன் இணைந்து மொழி ஆற்றலைப் பெருக்கிப் படைப்பாற்றலை உருவாக்குதலே இவ்வலகில் நோக்கமாகும்.

## 3.1 கேட்டல் திறன்

மொழியைக் கற்கும் போக்கில் முதல்படி அடிப்படைத் திறன்களைப் பெறுதல் ஆகும். மொழி தகவல் பரிமாற்ற ஊடகமாக மட்டுமின்றித் தகவல்களுக்குத் தோற்றுவாயாகவும் அமையும். எண்ணங்களை உருவாக்குவதற்கும், உருவாக்கியதைத் தம்முள்ளும் பிறருள்ளும் பதிப்பதற்கும் பயனுடையதாகத் திகழ்கிறது. மொழியின் பயன் ஒருவருக்குக் குறைவின்றிக் கிடைக்க, அடிப்படைத் திறன்களைத் தொடக்கத்திலும் உயர்நிலைத் திறன்களை வளர்ச்சி நிலையிலும் பெற வேண்டும்.

மொழியின் அடிப்படைத் திறன்கள், அவை பெறப்படுகின்ற நிலையில் கொள்திறன், வெளியிடு திறன் என இருவகைப்படும்.

கேட்டலும் படித்தலும் கொள் திறன்கள்.
பேசுதலும் எழுதுதலும் வெளியிடு திறன்கள்.

இவை : கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் என நான்காகப் பிரிக்கப்படுகின்றன.

கல்வி ஏற்பாட்டில், தமிழ்மொழிக் கல்வி, தொடக்க நிலை வகுப்பிலிருந்தே இடம் பெறுவதால் இந்நான்கு திறன்களும், தாய்மொழிச் சூழலிலும் நடைமுறை பயன்பாட்டு அடிப்படையிலும் தொடக்கநிலை வகுப்புகளிலிருந்து வளர்க்கப்படுகின்றன.

இந்நான்கு திறன்களையும் வளர்ப்பதற்குக் கல்வியியல் அணுகுமுறைகள் உள்ளன. அவை திறனின் தன்மை, திறன் வளர்க்கும் முறைகள், திறன் வளர்ச்சியைத் தேர்ந்தறியும் முறைகள் ஆகியனவற்றுள் அடங்கும்.

### 3.1.1 கேட்டல் திறனின் நோக்கம்

- சொற்களஞ்சியப்பெருக்கம் அடைதல்
- சொற்களஞ்சிய வளர்ச்சி
- சொற்கள் பயன்பாட்டை ஏற்றல்
- நினைவாற்றலை வளர்த்தல்
- எண்ணத்தூண்டலை ஏற்படுத்துதல்

- பொருள் புரிதல்
- தற்கருத்து வெளிப்பாடு
- கற்பனைத்திறன் மேம்பாடு.
- தகவல் தொடர்பு திறன்.

### 3.1.2 கேட்டல் திறன் நிலைகள்

சாதாரணமாகக் கேட்டல், பல்வேறு நிகழ்ச்சிகளைக் கேட்டல் என்பது அவரவர் மனநிலை மற்றும் தேவைக்கேற்ப மாறுபடும். எவ்வகைக் கேட்டல் பெரும்பாலும் நடைபெறுகிறது என்பதைக் காண்போம்.

- **வெறும் கேட்டல்**

வெறும் கேட்டலை எளிய நிலை கேட்டல் என்கிறோம். ஏனெனில் எவனொருவன் அருகில் பேச்சு ஒலிகள் எழுகிறதோ அங்கு அனைவரும் கேட்கின்றனர். இதனையே வெறும் கேட்டல் என்கிறோம்.

சான்று : நாம் தெருவில் செல்லும் வழியில் ஏதோ ஒரு மேடைப் பேச்சாளர் பேசுவதைக் கேட்டல்.

- **உற்றுக்கேட்டல்**

உற்றுக்கேட்டல் வெறும் கேட்டலைவிடச் சற்று உயர்ந்த நிலையாகும். ஒருவர் கூறும் கருத்துகளை உற்றுக்கேட்டு அதிலுள்ள செய்திகளைப் புரிந்து கொள்ள முனைவதே உற்றுக்கேட்டல் என்கிறோம்.

- **செவிமடுத்தல்**

செவிமடுத்தல் என்பது மொழிப் பொருள் கொள்ளல் என்பதாகும். கூறுகின்ற கருத்தின் பொருளை முழுமையாகப் புரிந்துகொள்ளுதல் ஆகும். இதனையே செவிமடுத்தல் என்கிறோம்.

- **நுட்பமாகக் கேட்டல்**

நுட்பமாகக் கேட்டல் கல்விச் சூழலுக்கு உரியது. கற்றலுக்கும், சிந்தனைக்கும் ஏற்றது. நுட்பமாகக் கேட்டல் என்பது ஒரு சொல்லைக் கேட்கும் திறனில் தொடங்கி ஒரு கட்டுரை அல்லது செய்யுள் முழுநிலையைக் கேட்கும் திறனில் பெறும் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சுருங்கக்கூறின் சொல்– பொருள்– தொடர்– அமைப்பு– முன்னிலை என்ற அடிப்படையில் நடைபெறுகிறது.

### 3.1.3 கேட்டல் சூழல்களின் இயல்புகள்

நடைமுறை வாழ்க்கையில் ஏற்படும் கேட்டல் சூழல்களில்

1. இயல்பான பேச்சு அல்லது உரையாடுதல்
2. கேட்போர் எதிர்ப்பார்ப்பும் நோக்கமும்
3. பார்த்தலும் கேட்டலும் இணைதல்
4. கேட்கும் போக்கில் துலங்கல்
5. பேசுபவரை ஈர்த்தல்

ஆகிய இயல்புகள் அறியப்படுகின்றன.

- **இயல்பாகப் பேசுதல் அல்லது உரையாடுதல்**

கடைத்தெரு, மக்கள் கூடும் பொது இடங்கள். பொழுது போக்கு அரங்குகள் நண்பர்கள், உறவினர்கள் உரையாடல் வேளைகள் போன்றவற்றில் இயல்பாகப் பேசுதல் அல்லது உரையாடுதலைக் கேட்கலாம். இவற்றிலும் இவை போண்று அமைக்கப்படும் (நாடகம், திரைப்படம் போன்றவற்றில்) செயற்கைச் சூழல்களிலும் இயல்பாகப் பேசுதலைக் கேட்கலாம். இவற்றில் குறைசொல் ஒலிப்பு, ஒலிப்பு பிறழ்ச்சி. பேச்சு வழக்குச் சொற்கள், வெற்றொலிகள், நிரப்புத் தொடர்கள் மீண்டுரைக்கப் போக்கு ஆகியன காணப்படுகின்றன.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர் இயல்பாகப் பேசும்போது பெரும்பாலான சொற்களை முழுமையாக ஒலிப்பதில்லை. அவன் வந்தான் என சொல்லும் போது அவன் வந்தான் ஆகிய இரு சொற்களிலும் உள்ள ன் தெளிவாக ஒலிக்கப் பெறுவதில்லை. பேசும்திறன் வளர்ச்சிக்கு இத்தகைய தெளிவற்ற ஒலிப்புக் குறைபாடு பாதிப்பை ஏற்படுத்துகிறது.

நடைமுறையில், தாய்மொழியாகத் தமிழைப் பேசுபவர்களிடம் கூட பிழைபட்ட ஒலிப்பினைக் காணமுடிகிறது. ல. ள ஆகியனவும் ழ, ள ஆகியனவும் ன, ண ஆகியனவும் ஒன்றுக்கொன்று மாறுபட்டு ஒலிக்கப்படுகின்றன. மாறுபட்ட ஒலிப்பைக் கேட்டலால் அது பிழைபட மனத்தில் பதிகிறது. வட்டார நிலையிலும் பிழைபட்ட ஒலிப்புகள் காணப்படுகின்றன. வாழைப் பழம் என்பதை வாயப் பயம் என ஒலிப்பதும் வியாழக்கிழமை என்பதை வியாசக்கிளமை என ஒலிப்பதும் வட்டார நிலையில் பிழைபட்ட ஒலிப்புக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

நடைமுறைப் பேச்சில், இலக்கிய வழக்கில் இல்லாத சொற்களைக் கேட்க முடிகிறது. உறவுப் பெயர்கள், உணவுப் பெயர்கள் போன்றன பேச்சு வழக்கிலேயே பெரும்பாலும் இடம் பெறும் சொற்களாகும். மேலும் பாலுணர்வுச்சொற்கள், பொருள் குறிப்புச் சொற்கள் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படுகின்றன.

- **கேட்போர் எதிர்பார்ப்பும் நோக்கமும்**

நடைமுறை வாழ்க்கையில் ஒரு பேச்சைக் கேட்பவர் தனக்குள்ளே முன்னரே ஓரளவு தீர்மானிக்கப்பட்ட எதிர்பார்ப்புகளைக் கொண்டு கேட்கிறார். அவ்வாறில்லையெனில் கேட்க விரும்புவதில்லை. அரசியல் சூழ்நிலைகளை அறிய விருப்பம் உடையவர் அரசியல் மேடைகளில் பேசுவதைச் செவிமடுக்கிறார். ஓரிடத்தில் சமயச் சொற்பொழிவு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, அவ்வழியே சமயத்தில் பற்றில்லாதவர் செல்வாரேயாயின் அச்சொற்பொழிவை கேட்க விரும்புவதில்லை. இவ்வாறாகக் கேட்போர் எதிர்பார்ப்பும் நோக்கமுமே அவரைக் கேட்கத் தூண்டுகின்றன.

- **பார்த்தலும் கேட்டலும் இணைதல்**

கேட்டல் செவி சார்ந்த செயல். எனினும் கேட்பவர் செவிக்கு மட்டுமே வேலை கொடுப்பதில்லை. ஒருவர் பேச்சைக் கேட்கும் போது அப்பேச்சு எங்கிருந்து வருகிறதெனப் பார்த்தவாறே கேட்க விரும்புகிறார். வகுப்பறையில் ஆசிரியர் பேசும்போது பேச்சினைக் கேட்க விரும்பும் மாணவர் அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டே கேட்டால்தான் கேட்டது போன்ற உணர்ச்சியைப் பெறுகிறார். வானொலி கேட்டல், தொலைபேசியில் கேட்டல் போன்ற விதி விலக்கான சூழல்களில் தவிர பிற வேளைகளில் பார்த்தலும் கேட்டலும் இணைந்தே நடைபெறுகின்றன.

- **கேட்கும் போக்கில் துலங்கல்**

எதிர்பார்ப்பு. நோக்கம் ஆகியன கொண்டு கேட்பவர்கள் அவ்வப்போது துலங்கல்களை வெளிப்படுத்துகின்றனர். எல்லாவற்றையும் கேட்ட பின்னர் துலங்கலை வெளிப்படுத்தும் நிலை மிக அரிதாகும். துலங்கல்கள், மெய்ப்பாடுகளாக வெளிப்படும். கரவொலி எழுப்பல். முகமலர்ச்சி காட்டல், புன்முறுவல் பூத்தல் போன்றன கேட்டலில் வெளிப்படும் செய்திகள், கருத்துகள் ஆகியவற்றிற்கு ஏற்பத் தரும் துலங்கல்களாகும். முகஞ் சுழித்தல், கேட்டலிலிருந்து விலகி நிற்றல் நெற்றியைக் கையால் பிசைதல் போன்றன கேட்டலுக்குக் தவிர்ப்புக் காட்டும் துலங்கல்களாகும்.

- **பேசுபவரை ஈர்த்தல்**

கேட்டலில மற்றுமொரு நடைமுறை இயல்பு பேசுபவரை ஈர்ப்பதாகும். கேட்போரை நோக்கிப் பேசுவோர் தகவல்களை வெளியிடும் போது கேட்பவரின் ஏற்புத் துலங்கல்கள் பேசுபவரை ஊக்கமூட்டுவனவாக அமையும், கேட்டல் இயக்கநிலையில்லாச் செயலாயினும் இயக்கச் செயலாகிய பேசுதலுக்கு உரமூட்ட வல்லது.

### 3.1.4 கேட்டல் திறக் கூறுகள்

கல்வி பெறுவதற்கு வாயிலாக அமையும் கேட்டல் திறனைப் பல்வேறு கூறுகளாக நோக்க முடியும், கேட்டலின் போது சிலவேளை, பேசப்படுகின்ற பொருளின் தன்மை மட்டும் உணரப்படுகிறது. சிலவேளை பேசியவரின் மொழிகள் மனத்தில் பதிகின்றன. எனவே கேட்டல் திறனையும் உட்திறன்களாகப் பிரித்துக் காணலாம்.

தகவல் தன்மையினை உணர்தல், பேசப்பட்ட மொழிகளை நினைவிற் கொள்ளல். புதிய சொற்களைப் புரிதல். தகவல்களை நுனுகுதல், பேசப்படுவனவற்றில் அமைந்த உணர்ச்சிகளைப் புரிதல், பேசப்படும் மொழிகள் ஒலி அழுத்தங்களுக்கு ஏற்ப பொருள் உணர்தல், பேசப்படவனவற்றில் அமைந்துள்ள பிழைகளை இனங்காணல், கேட்கப்படும் தகவல்கள் உள் வெளித்தொடர்புகளை எடுத்துக்காட்டல் போன்றவை. கற்றல் நோக்கில் அறியப்படுகின்ற கேட்டல் திறன் கூறுகளாகும்.

- **தகவல் தன்மை உணர்தல்**

பேசப்படுகின்றதை இது முழுநிலையில் கேட்டலாகும். இத்தகைய கேட்டலில் கேட்பவர் பேசப்படும் அனைத்துத் தகவல்களையும் கூர்ந்து நோக்குவதில்லை. மேலோட்டமாகக் கேட்கிறார். ஒருவர் சாலை வழியே நடந்து செல்லும்போது, பொது மேடைப் பேச்சைக் கேட்பதாகக் கொள்வோம். மேடையில் பேசுவோர் பயன்படுத்தும் சொற்கள் அல்லது வெளிப்படுத்தும் செய்திகள் போன்றவற்றிலிருந்து பேசுபவர் சார்ந்த அரசியல் கட்சியை அறியமுடிகிறது. அவர் பேசிய கருத்துகளைக் கேட்பவர் உளம் கொள்ளா விட்டாலும் பேசும் பொருள் தன்மையினை மட்டும் உணருகிறார். இது மேலோட்டக் கேட்டல் எனப்படும்.

- **நினைவிற் கொள்ளல்**

பேசப்பட்ட மொழிகளை நினைவில் கொள்ளுதல் நினைவாற்றல் திறனை வெளிப்படுத்துகிறது. இந்நிலை கற்பதில் சிறப்பிடம் பெறுகிறது. வரையறைகளை நினைவிற் பதிப்பதற்கும். படிப்பதற்கும், சொற் பொருள் வலுவூட்டத்திற்கும், நினைவாற்றல் திறன் துணைபுரிகிறது.

- **புதிய சொற்களைப் புரிதல்**

கேட்டலின் போது பேசுபவரால் பயன்படுத்தப்படும் புதிய சொற்களுக்கு முன் பின் அமைந்த மொழிகளை தொடர்புப்படுத்திப் பொருளறியப்படுகிறது. சொற்களுக்குப் பொருள் அறியும் திறன் கூர்ந்து கேட்டலால் ஏற்படுவதாகும். இது உள்ளோட்டக் கேட்டல் பண்பினைச் சார்ந்ததாகும்.

- **தகவல்களை நுணுகுதல்**

உள்ளோட்டக் கேட்டலில் தகவல்களை நுணுகுதலும் சாரும். பேசுபவரிடமிருந்து வெளிப்படும் தகவல்களில் பொதிந்துள்ள கருத்துக்களைப் புரிவதோடு அவற்றுள் அமைந்த ஏதுகள், விளைவுகள் ஆகியவற்றை கேட்டல் போக்கில் உணருகின்ற திறன் நுணுகுதலாகும். இத்திறன் கற்றலில் மேனிலைத் திறன்களை வளர்க்கும் வாயிலாகும்.

- **உணர்ச்சிகளைப் புரிதல்**

பேசுபவர் வெளிப்படுத்தும் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளல், கேட்டல் திறக் கூறுகளில் உயர்நிலையினதாகும். இத்திறன் எதிர்நின்று பேசுபவரின் உள்ளப்பாங்கினை அறிவதற்குத் துணைபுரியும். கற்றல் சூழலில் இத்திறன் வளர்க்கப்படுவதற்காக, பொருத்தமான இலக்கிய வடிவங்களை பேச்சுப் பொருளாகக் கொள்ளவேண்டும். நாடகம், திரைப்படம் போன்றன இத்திறனை வளர்ப்பதற்குரிய சிறந்த ஊடகங்களாக அமையும்.

- **ஒலி அழுத்தம்**

பேச்சு நிலையில் ஒலியழுத்தும், வெளிப்படுத்தப்படும் பொருளுக்கேற்ப அமைகிறது. பொருள் வெளிப்பாட்டில் ஒலியழுத்தம் கருதத்தக்க கூறாகும். கேட்டல் திறனை வளர்க்கும் போது ஒலியழுத்தத்தைப் புரியும் திறனையும் கருதுதல் வேண்டும்.

ஒலியழுத்தத்தைப் புரியும் திறன் இயல்பான பேச்சினை ஏற்பதற்குப் பெரிதும் பயனுடையதாகும். எனவே கேட்டல் திறனை வளர்க்கும் போது, வழங்கப்படும் பழகு செயல்களில் ஒலியழுத்தக் கூறுகள் அடங்கிய கற்றல் பகுதிகள் வழங்கப்பட வேண்டும்.

- **பிழை சுட்டல்**

உன்னிப்பாகக் கேட்கப்படுவதையும் பேசப்படும் பொருள் மொழி, போன்றன கேட்பவர் அறிவுதிறத்துள் மொழி திறத்துள் அமைவதையும் உறுதிப்படுத்துவது பிழைசுட்டல் திறனாகும். பேசப்படும் பகுதியில் சொல், தொடர், நிகழ்வுப் பிழைகளைச் சுட்டுமாறான பழகு செயல், கூர்ந்து கேட்டலுக்குரிய வாயிலாக அமையும்.

- **தொடர்புகளை எடுத்துக்காட்டல்**

கற்பிப்பு நோக்கங்களின் உயர் நிலை ஏலுமைகளான, பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடல் ஆகிய ஏலுமைகள் கேட்டல் பொருளின் தொடர்புகளை எடுத்துக் காட்டுவதால் வெளிப்படும். தொடர்புகள் கேட்டல் பகுதிக்குள்ளும் அமையலாம். கேட்டல் பகுதி சார்ந்து அதற்கு வெளியேயும் அமையலாம். தொடர்புகளை எடுத்துக் காட்டத் தக்க பழகு செயல்கள் மொழி சார்பாகவும். தகவல்கள் சார்பாகவும் வடிவமைக்கப்பட வேண்டும்.

### 3.1.5 கேட்டல் திறனை வளர்க்கும் வாயில்கள்

தற்போதைய பாடத்திட்டத்தில் கீழ்க்காணும் மொழி (இலக்கியம்) வடிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

1. பாடல் 2. கதை 3, இருவர் உரையாடல் 4. இருவருக்கும் மேற்பட்டோர் உரையாடல் 5, செய்திகள் 6, விளக்கங்கள் (வருணனை) 7. கட்டளைகள் (ஏவல்தொடர்) 8. விடுகதைகள் – புதிர்கள் 9. வசனங்கள் 10. நாடகம் 11. வேண்டுகோள் (வியங்கோள்)

இவைபோன்ற இலக்கிய வடிவங்களை அதன் கடின நிலைக்கேற்ப உரிய வகுப்புகளுக்குத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தலாம். இவை கேட்டல் திறனை வளர்க்கும் வாயில்களாகும். இவற்றைப் பேச்சு ஊடகத்தால் வெளிப்படுத்திக் கேட்டல் திறனை வளர்க்கும் வாயில் களங்களாக்கலாம்.

### 3.1.6 பழகு செயல்பாடுகளின் வகைகள்

கேட்டலின் தன்மைகளைக் கருத்திற் கொண்டு பல வகைப்பட்ட செயல்பாடுகளை ஆசிரியர்களே உருவாக்கிக் கொள்ளலாம். சிலவகைச் செயல்பாடுகள் கீழே தரப்படுகின்றன. அவற்றிற்கான எடுத்துக்காட்டுகள் அடுத்து வரும் பகுதியில் தரப்படுகின்றன.

- **மொழி சாராத் துலங்கல்**

குழந்தைகளுக்குக் கதை சொல்லுதல், அவர்களை ஒவ்வொருவாரகப் பாடச் செய்து பிற குழந்தைகளைக் கேட்கச் சொல்லுதல், ஒளிப்பதிவு நாடா போன்றவற்றைப் பார்க்கச் சொல்லுதல் போன்றன தொடக்கநிலைக் கேட்டல் செயலை ஊக்குவிப்பனவாகும். இவை போன்ற செயல்களில் குழந்தைகளின் கேட்டல் ஆர்வத்தினை அவர்கள் வெளிப்படுத்தும் முகக் குறிப்புகள், மெய்யசைவுகள், ஆகியனவற்றிலிருந்து அறியலாம். இத்தகைய செயல்களில் குழந்தைகளை ஈடுபடுத்தும் போது அவர்களிடம் வினாக்களைக் கேட்டு அவர்களைச் சலிப்படையச் செய்தல் கூடாது. மொழி சாராக் குறிப்புகளை அவர்கள் வெளிப்படுத்துவதைக் கொண்டு கேட்டல் ஆர்வத்தினை அறியலாம். நெடுநேரம் கேட்டலில் ஈடுபடச் செய்யும் பழகு செயல்களே இவை. தொடக்க நிலையில் இவற்றில் ஈடுபடுத்த வேண்டும்.

- **குறுந் துலங்கல்**

சிறிய அளவிலான துலங்களைத் தரத்தக்க பழகு செயல்களிலிருந்து கேட்டல் திறனை வளர்க்க முடியும். அவை கட்டளைகளுக்கேற்ப செயல்படுதல் பொருள்களைக் குறித்துக் காட்டல், தவறுகளைச் சுட்டுதல், சரியா தவறா என கூறுதல், முறைப்படக் கோடிட்ட இடங்களை நிரப்புதல், வரையறைகளிலிருந்து சொற்களை அல்லது நிகழ்ச்சிகளை ஊகித்தல் (விடுகதை) போன்றன அவை.

- **நெடுந்துலங்கல்**

கேட்டல் திறனை வளர்க்கவும், தேர்ந்தறியவும் நெடுந்துலங்கலைத் தரத்தக்க செயல்பாடுகளும் உள்ளன. அவை வினா–விடை, குறிப்பு எழுதுதல், சுருக்கி வரைதல், தொடர் கோடுகளை நிரப்பல் போன்றன. இவை உயர்நிலை, மேல் நிலை வகுப்புகளுக்குப் பொருத்தமுடைய செயல்பாடுகளாகும்.

- **விரிவுத் துலங்கல்**

சிக்கல் தீர்த்தல், நுணுகுதல் தன்மையான வினாக்களுக்கு விடையளித்தல் போன்றன விரிவுத் துலங்கல் சார்ந்த பகுழ செயல்பாடுகள். இவற்றின் வழியாகவும் கேட்டல் திறனை வளர்க்கலாம், தேர்ந்தறியலாம். இச் செயல்பாடுகள் மேனிலை வகுப்புகளுக்கு உரியவை.

கேட்டல் திறனில் முறையான பயிற்சி கொடுக்க ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை :

- **ஒலிகளைக் கேட்டல்**

பேசுபவருடைய மொழி வகுப்பு நிலைக்கேற்ப அமைதல் வேண்டும். இல்லையெனில் மாணவர்கள் சொற்களின் ஒலியை மட்டும் கேட்பர். அவர்களால் பொருள் உணர்ந்து கொள்ள முடியாது. எனவே அதற்கேற்ற வகையில் எளிய மொழியில் பேசுதல் வேண்டும்.

- **விட்டுவிட்டுக் கேட்டல்**

ஆசியர் பாடம் நடத்தும்போது மாணவர்கள் தொடர்ந்து கேட்டு வருகின்றனரா? என அறிந்து பேசுதல் வேண்டும். எனவே அதற்கேற்ற வகையில் இடையிடையே மாணவர்களிடம் வினா கேட்க வேண்டும். அவர்கள் விடையளிப்பதன் மூலம் அவர்கள் கேட்டு வருவதை அறியமுடியும்.

- **அரைகுறையாகக் கேட்டல்**

ஆசிரியர் கூறுவதைச் சில மாணவர்கள் அரைகுறையாகக் கேட்பர். அதற்கு ஏற்றாற்போல் ஆசிரியர் முன்னதாகவே நான் கூறும் செய்தியை முழுமையும் கேட்டு அதன்பின்னர் ஐயங்களைக் கேளுங்கள் எனக் கூறுதல் வேண்டும்.

- **ஒருசார் மனப்பான்மையுடன் கேட்டல்**

ஆசிரியர் மாணவர் உறவுநிலை சரியானதாக அமைதல் வேண்டும். மாணவர் வெறுப்பு மனப்பான்மையுடன் இருந்தால் ஆசிரியர் எத்துணை சுவையாகக் கூறினாலும்

கேட்கமாட்டார்கள். எனவே சிறந்த கேட்டல் நிகழ வேண்டுமாயின் ஆசிரியர் மாணவர் உறவுநிலை சரியாக அமைந்திருத்தல் வேண்டும்.

- **தயாரிப்புடன் பேசுதல்**

ஆசிரியர் பேச்சைக் கேட்டு மாணவர் மையக்கருத்தையும் படிப்படியான வளர்ச்சியையும் அறிந்து கொள்ளும்வண்ணம் ஆசிரியர் நன்கு தயாரித்து முறையாகப் பேசுதல் வேண்டும். அப்பொழுதுதான் மாணவர் மையக்கருத்தையும், அதனை விளக்கக் கூறும் எடுத்துக்காட்டுக்களையும் நன்கு அறிவார்கள்.

- **பேசுதலைக் கேட்டல்**

தொடக்கநிலை வகுப்புகளில் மாணவர்களது குடும்பம், ஊர் முதலான தலைப்புகளில் அவர்களுக்குள்ளே பேசிக் கேட்கச் செய்தல்வேண்டும். நடுநிலை வகுப்புகளில் பொதுத்தலைப்புகளைப் பற்றிப் பேசிக் கேட்கச் செய்யலாம். பின்னர்க் கதைகளைக் கூறி அவற்றிலிருந்து சில வினாக்களைக் கேட்கலாம்.

- **படித்தலைக் கேட்டல்**

உரைநடைப்பாடத்தைப் படித்து மாணவர்களைக் கேட்கச் செய்தல் வேண்டும். நடுநிலைப் பள்ளிகளில் பாடநூல்களைப் பயன்படுத்துவதோடு நூல் நிலையத்திலிருந்து எடுக்கப்பட்ட பொதுநூல்களிலிருந்தும் ஒரு பகுதியைப் படித்து அவர்களைக் கேட்கச் செய்யலாம்.

- **வானொலி கேட்டல்**

ஒருவர் பேச்சை நேரில் கேட்பதைவிட வானொலிப் பேச்சைக் கேட்பது சற்றுச் சிக்கல் நிறைந்ததாகும். வானொலிப் பேச்சு ஒரு பொதுவான வேகத்தில் அமையும். இடையில் நிறுத்தமின்றிச் செல்லும். எனவே வானொலி கேட்டல் திறனுக்கு அதிக கவனிப்புத் திறன் தேவை. அதனால் முன்னதாகவே மாணவர்கள் எதைப் பற்றிக் கேட்க இருக்கின்றனரோ, அந்தச் செய்திகளைக் குறித்துக் கொள்ளவேண்டும். வானொலிப் பாடல் முடிந்தவுடன் சிறுசிறு வினாக்கள் கேட்கப்படும் என்பதனை மாணவர்களுக்கு முன்கூட்டியே கூற வேண்டும். அப்போதுதான் வானொலி கேட்டலை ஊன்றிக் கேட்பார்கள்.

- **ஒலிப்புத்தகம்**

கல்வி உலகில் தொழில்நுட்ப வளர்ச்சியின் ஆரம்ப காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்ட முக்கியமான துணைக்கருவியே ஒலிப்புத்தகம். ஒரு நூலை ஒலிப்புத்தமாகப் பதிவுசெய்துவிட்டால் அதனை நம் விருப்பப்படி எத்தனை முறை வேண்டுமானாலும் போட்டுக் கேட்கலாம். இப்புத்தகத்தில் ஒலியின் அதிர்வுகள் பதிவு செய்யப்படுகின்றன. வேண்டாத ஒலிகளை அழித்து விட்டுப் புதிய ஒலிகளைப் பதிவு செய்யலாம்.

மாணவர்களுக்குத் தேவையான குறிப்பிட்ட பகுதியை மட்டும் கற்றுத் தருவதற்கான ஒலிப்பதிவு நாடாக்கள் தயாரிக்கப்பட்டன. மாணவர்களின் இயல்புக்கு ஏற்றவாறு மொழி நடையை ஆசிரியர் பயன்படுத்த வேண்டும். ஒலிப்புத்தகத்தைக் கொண்டு பாடம் நடத்தும்போது ஆசிரியர் பேசிக்கொண்டு இருக்காமல் மாணவரோடு சேர்ந்து உரையாட வேண்டும், (பாடல்), பாடப்பொருளைத் தெளிவாக விளக்க வேண்டும். நல்ல குரல் வளம், குரலில் ஏற்ற இறக்கம், குரல் அழுத்தம் முதலான உத்திகளால் மாணவர்களுக்குக் கற்றல் அனுபவத்தை அளிக்கும் வகையில் ஒலிப்புத்தகம் அமைய வேண்டும்.

### 3.1.7 கேட்டல் திறனின் பயன்கள்

- சிந்திக்கும் திறன் பெருகும்.
- தன்னம்பிக்கை வளரும்.
- தாழ்வு மனப்பான்மை குறையும்.
- கேட்கும் திறனால் மொழியாற்றல் பெருகும்.
- நினைவாற்றல் அதிகரித்து ஆக்கத்திறன் பெருகும்.

## 3.2 பேசுதல் திறன்

பேசுதல் திறன், பேச்சுத் திறன் ஆகிய இரு சொல்லாட்சிகள் உள்ளன. பேசுதல் என்பது தகவல் பரிமாற்றச் செயலைக் குறிப்பதாகும். செய்திகளை வெளிப்படுத்தல் என்றளவிலேயே பேசுதல் நிறைவு பெறும். பேச்சுத்திறன் என்பது, பிறரை ஈர்க்குமாறு கருத்துகளை வெளிப்படுத்துதல்.

ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருக்கும் போது பேசுதல் நிகழ்கிறது. மேடையில் பேச்சு நிகழ்கிறது. பேச்சுத் திறன் வளர, பேசுதல் திறன் அடிப்படையாகும். அவ்வடிப்படையிலிருந்து இலக்கியக் கூறுகளை இயற்சிப் பெறப்படுவதே பேச்சுத் திறன். தொடக்க நிலை மொழிக்கல்வியில் இன்றியமையாததாகக் கருதபடுவது பேசுதல் திறனாகும்.

மொழி கற்பித்தலின் நோக்கம் அவரவர் தமிழ்மொழியை நன்றாகப் படிக்க, எழுதப் பயிற்சியளிப்பதே ஆகும். மாணவர்களைத் தெளிவாகவும் திருத்தமாகவும் தமிழ் மொழியில் பேசப் பழக்குவது ஆசிரியருடைய கடமையாகும். மொழி கற்றலில் அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றில் சிறந்து விளங்க வேண்டும். மொழி கற்பித்தலின் நோக்கம் மாணவர்களை நன்றாகப் பேச, நன்றாகப் படிக்க, நன்றாக எழுதப் பயிற்சியளிப்பதேயாகும். இவற்றுள் படிப்பின் முதல்நிலை பேச்சாகும்.

வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் தன்னை உணர்த்துவதும் பிறரை உணர்வதும் பேச்சின் அடிப்படையில்தான்; ஒருவரின் அறிவுக்கூர்மையை அவரின்

பேச்சின் மூலம் மதிப்பிடமுடியும். மாணவர்களைத் தெளிவாகவும், திருத்தமாகவும் தமிழில் பேசப் பழக்குவது ஆசிரியருடைய கடமையாகும்.

### 3.2.1 பேசுதல் திறனின் நோக்கம்

பேசுதல் திறனின் முதன்மை நோக்கமே திருத்தமாகவும், அழுத்தமாகவும், தெளிவாகவும், அச்சம் கூச்சமின்றி அளந்தறிந்து பேசுதல் ஆகியவற்றைக் குறிப்பாதாகும்.

- **திருத்தமாகப் பேசுதல்**

கருத்துச்செறிவும், சொற்கோவையும் பொருத்தமான ஒலிப்பும் செம்மையாக இருப்பின் பேச்சில் திருத்தம் தாமாகவே ஏற்படும். வாய்மொழிப் பயிற்சியின் வாயிலாக மாணவர்கள் பிழையின்றிப் பேச இயலும். பிறர் தமது கருத்துகளை எளிதில் உணர்ந்து கொள்ளும் வகையில் தெளிவாகவும், இனிமையாகவும் பேசுவதே திருத்தமான பேச்சின் நோக்கமாகும்.

- **அழுத்தமாகப் பேசுதல்**

ஒலிக்கு அழுத்தம் கொடுக்காவிடில் பொருள் மாறுபடும். சொல்வதை அழுத்தம் திருத்தமாகச் சொல்வதினால் கேட்போருக்குச் சொல்லும் செய்தி எளிதில் விளங்கும்; சில சொற்களுக்கு மட்டும் அழுத்தம் கொடுத்துப் பிறருடைய கவனத்தை விரைவில் கவர முடியும்.

- **தெளிவுடன் பேசுதல்**

பேச்சில் தெளிவு இல்லையேல் கூறுவதொன்று கொள்வதொன்றாக இருக்கும். எளிய சொற்களில் கேட்போர் மனங்கொள்ளும் வகையில் ஏற்ற எடுத்துக்காட்டுகளுடன் இயல்பாய், இனிமையாய், விரைவின்றி, முன்னுக்குப் பின் முரணின்றி, விளக்கமாய், தெளிவாய்ப் பேசுதலே தெளிவான பேச்சாகும்.

- **அச்சம் கூச்சமின்றிப் பேசுதல்**

தெளிவாகப் பேசுதலுக்கு அச்சம், கூச்சம் இருக்கக் கூடாது. சிலர் ஆசிரியர்கள் முன் அல்லது புதிய மனிதர்களிடம் பேசும்போது அச்சப்படுவார்கள். அச்சம், கூச்சம் தவிர்த்தல் உச்சரிப்பை நன்கு திருத்தும். அதன் காரணமாய்ப் பேச்சும் தெளிவடையும். பேச்சுத்திறனை வளர்ப்பதன் நோக்கமே அச்சம் கூச்சமின்றிப் பேசுதலேயாகும்.

- **அளந்தறிந்து பேசுதல்**

பேச்சின் கருத்துகளைப் பிறர் உணர்ந்து கொள்ளக் கூடிய அளவிற்கு பொறுமையாக அளந்தறிந்து பேசவேண்டுவது இன்றியமையாததாகும். எங்குக் கருத்து சொல்லப் போகின்றோம் என்பதை அறிந்து, அங்குச் சொற்களால் அளந்து பேச வேண்டும்.

### 3.2.2 பேசுதலின் தன்மைகள்

கேட்டலைப் போன்றே அடிப்படைத் திறன்களுள் ஒன்றாகக் கருதப்படுவது பேசுதல். இது வெளியிடுதிறனாகும். கீழ்வரும் பகுதிகள் அதன் சிறப்புத் தன்மைகளை விளக்குகின்றன.

- **கேட்டல் வழியே பெறப்படுவது**

மொழியின் அடிப்படைத் திறன்களை வளர்ப்பதற்குப் பல முறைகள் உள்ளன. ஆனால் பேசுதல் திறன் கேட்டல் வழியே மட்டுமே பெறப்படுவதாகும். கேட்டலும் பேசுதலும் ஒன்றுக்கொன்று துணை புரிபவனவாகும். இவ்விரண்டும் இணைந்த நிலை முன்னரே விளக்கப்பட்டது. கேட்டல் வாய்ப்புகலைப் பெருக்கப் பெருக்க பேசுதல் திறனும் வளர வாய்ப்புண்டு.

- **பழகப் பழகப் பெருகும்**

செந்தமிழும் நாப்பழக்கம் எனும் முதுமொழிக்கிணங்க. பேசுதல் திறன் எழுத்தறிவாலோ, படிப்பறிவாலோ பெறுவதன்று. பேசிப் பழகினாலன்றிப் பேசுதல் திறனைப் பெற இயலாது. ஒரு மொழியைப் பேசிக் கொண்டிருப்பவர் நீண்ட காலமாக அதைப் பேசாதிருப்பாராயின் அம் மொழியில் பெற்றிருந்த பேசுதல் திறனை இழப்பார். தாய்மொழிக்கும் இந்நிலை பொருந்தும்.

- **ஒலிப்பு உறுப்புகள் சார்பு**

பேசுதல் ஒலிப்பு உறுப்புகளைச் சார்ந்த செயலோடு இணைந்ததாகும். நா, பல், இதழ், அண்ணம் ஆகியன ஒலிப்பு உறுப்புகள். இவற்றின் இயக்கங்களை உயிரியல் பாங்கில் முறையாக இல்லாதிருப்பின் பேசுதல் திறன் பாதிப்புக்குள்ளாகும். இவற்றின் இயக்கங்கள் இயற்கையாக அமையுமாயினும் அவற்றை நெறிப்படுத்தப் பழகு செயல்கள் இன்றியமையாதன.

- **நேருக்கு நேர் தகவல் பரிமாற்றம்**

எழுத்து மொழியும் தகவல் பரிமாற்றத்திற்கு உரியதாயினும், நேருக்கு நேர் தகவல் பரிமாற்றம் பேசுதலால் நிகழ்கிறது, நேருக்கு நேர் தகவல் பரிமாற்றத்திற்குரிய பேசுதல் பிறவகைத் தகவல் பரிமாற்றத்தை விடச் செயல் விளைவு மிக்கது. ஒருவர் நேரில் தரும் தகவல்கள் எழுத்து வழி தரும் தகவல்களைவிடப் பாதிப்பை அதிகமாக்கும். பேசும்பேச்சு காற்றோடு சென்றாலும் உள்ளத்தை ஊடுருவவல்லதாகும்.

- **சொற்களஞ்சியச் சார்பு**

பேசுதலுக்கு மிகவும் இன்றியமையாதது சொற்களஞ்சிய அறிவு. தகவல்களை வெளிப்படுத்தச் சொற்கள் தேவை,

- **உணர்வுகளை வெளிப்படுத்தும் ஊடகம்**

எழுத்தின் வழி பெறப்படுகின்ற உணர்வினைவிடப் பேசுதல் வழி பெறப்படுகின்ற உணர்வின் அளவு மிகுதி, இலக்கியச் சுவையுணர் திறன் கொண்டவர்களே, எழுத்து வழி உணர்வைப் பெற முடியும். ஆனால் பேசுதல் திறன்மிக்க பேச்சில் வெளிப்படும் உணர்வுகளை கல்லாதாரும் உணர இயலும். குரல் ஏற்றத்தாழ்வு, அழுத்தம், நிறுத்தம் போன்ற மொழியியல் கூறுகள் பேசுதலிலும் பேச்சிலும் காணப்படும்.

- **ஊக்கமூட்டும் வலிமை**

வாயுள்ள பிள்ளை பிழைக்கும் ; மதுரைக்கு வழி வாயிலே ; வாளினை விட நா வலியது போன்ற முதுமொழிகள் பேச்சின் வலிமையினை வெளிப்படுத்துவனவாகும்.

அரசியல், வணிகம், நீதி போன்ற துறைகளில் பேச்சின் பங்களிப்பு அளப்பரியது. பேச்சு ஒருவரது நினைவினைத் தூண்டுவது போல, நினைவைப் போக்கவும் துணையாகும். நினைவு நீக்க மருத்துவம் (Hypnotheraphy), ஆற்றுப்படுத்தல் (Counselling), வழிகாட்டுகை (Guidance) போன்ற மனவியல் சார்ந்த துறைகளில் பேச்சுத்திறன் பெரிதும் பயன்படுவதாகும்.

- **எழுத்து தேர்வால் அளக்க இயலாமை**

கல்வியில் பல திறனை அளப்பதற்கு எழுது முறை பயன்படுத்தப்படுகிறது. ஆனால் பேசுதல் திறனை அளப்பதற்குப் பேச்சுதான் ஊடகம். தேர்வுக்கு உட்படுவோரின் பேசுதலை உற்று நோக்கியே மதிப்பிட வேண்டும்.

### 3.2.3 பேசுதல் திறன் வளர்க்கும் செயல்பாடுகளில் கவனிக்கத்தக்கவை

குழந்தைகள் பேசுதலை மேற்கொள்ள உருவாக்கப்படும் சூழல்கள் அனைத்தும் பேசுதல் திறன் வளர்க்கும் செயல்பாடுகளாகும். படம் பார்த்துக் கதை சொல்லுதல், வகுப்புத் தரத்திற்கேற்ற தலைப்புகளில் கருத்தாடல், குழுவில் ஒவ்வொருவராகப் பேசுதல் போன்றன பேசுதல் திறன் வளர்க்கும் செயல்பாடுகளில் சிலவாகும். பேசுதல் சூழலை ஏற்படுத்தும்போது குழந்தைகள் தயக்கமில்லாமல் பேசவும், ஆர்வத்துடன் ஈடுபடவும், அனைவரும் பங்கேற்கவும் ஆசிரியரின் ஊக்குவிப்பு தேவை.

கேட்டலுக்கு வழங்கப்படும் செயல்பாடுகளில் ஒருபுறம் பேசுதல் நிகழ்கிறது. மறுபுறமே கேட்டல் நிகழ்கிறது. அந்நிகழ்ச்சிகளில் ஆசிரியரின் செயலளவு மிகுதியாகும். ஆனால் பேசுதலுக்காக வழங்கப்படும் செயல்பாடுகளில் குழந்தைகளின் (மாணவர்கள்) பங்கேற்பே மிகுதியாக அமைகிறது. ஆசிரியர் ஊக்குவிப்பவராகவும் நெறிப்படுத்துபவராகவும் இயங்குகிறார்.

- **ஆசிரியர் வழிகாட்டல்**

தொடக்க வகுப்புகளில் வழங்கப்படும் செயல்பாடுகளில் குழந்தைகள் மழலை ஒலிப்பைத் தவிர்ப்பதற்கு ஆசிரியரே பேசிக் காட்ட வேண்டும்.

மழலை ஒலிப்பு என்பதை எளிதாக வரையறுக்க இயலாது. சொற்களின் ஒலியை நீட்டியும், இலக்கணத் தொடர் அமைப்பினை மீறியும், தெளிவு குறைந்த ஒலிப்புடனும் பேசப்படுவதே மழலை எனக்கொள்ளலாம். தம் குழந்தையின் மழலையைக் கேட்கப் பெற்றோர்கள் விரும்புவர். எனினும் அம் மழலையினை ஐந்து அகவைக்கு மேற்பட்ட குழந்தை பேசுதலை விரும்பார். பேசுதலில் முதிர்ச்சியில்லையே என வருந்துவர். வீட்டிலும் சுற்றுப்புறத்திலும் குழந்தையின் பால் பற்றுக் கொண்டோர் குழந்தையைப் போன்றே பேசி மகிழ்வர். ஆகவே வீட்டுச் சூழலில் குழந்தைகள் மழலையாகப் பேசுதலைத் திருத்துவதற்கு வாய்ப்புகள் குறைவு. வகுப்பறையில் ஆசிரியர் தெளிவாகப் பேசுவதாலும் அவர்கள் மழலையாகப் பேசுதலைத் திருத்துவதாலும் குழந்தை தெளிவாகப் பேசும்.

- **அச்சம் கூச்சம் ஆகியனவற்றை நீக்கல்**

அச்சம், கூச்சம் ஆகியன உளவியல் சார்ந்த மனப்பாங்குகளாகும். இவற்றைப் போக்க ஒத்தநிலை அல்லது உள்ளப் பாங்குடைய குழந்தைகளைக் குழுவாக இணைத்துப் பேசுதல் செயல்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும். குழந்தைகள் தங்களுக்குப் பழக்கமானவரிடையேயும், நட்புக் கொண்டவர்களிடையேயும் அச்சம், கூச்சம், தயக்கமின்றிப் பேசுவர். படிப்படியாகப் பேசுகின்ற மன உறுதியை வளர்ப்பதற்குப் பாராட்டல், பொறுப்பு வழங்கல் போன்ற உத்திகளை ஆசிரியர் கையாள வேண்டும்.

தேவையான சொல்லறிவு இல்லாத போதும் பேசுதல் செயல்பாடுகளில் ஈடுபடக் குழந்தைகள் தயங்குவர். குழந்தைகளிடம் போதிய அளவு சொற்களஞ்சியப் பெருக்கம் ஏற்பட்டுள்ளதா என்று ஆசிரியர் உறுதி செய்வதோடு, குழந்தைகளின் சொற்களஞ்சிய வட்டத்திற்குள் அமையத்தக்க பேசுதல் செயல்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும்.

- **ஊக்குவிப்பு உத்தி**

மாணவர்களைக் குழுச் செயலில் ஈடுபடுத்தும்போது ஆசிரியர் மேற்கொள்ளும் ஊக்குவிப்பு உத்திகள் பல.

1. ஆர்வமூட்டல்
2. எடுத்துக்கொடுத்தல்
3. கனிவான பேச்சு
4. நகைச்சுவைப் போக்கு
5. நெறிப்படுத்து திறன்
6. பரிவுணர்வு
7. திருத்தமான பேச்சு
8. பாட அறிவு
9. பாராட்டல்

என்பன அவற்றுள் சிலவாகும்.

### 3.2.4 பேசுதல் செயல்பாடுகள்

சொற்களஞ்சியத்தைப் பெருக்கும் வழிகளில் பல பேசுதல் திறனை வளர்க்கப் பயன்படுவனவாகும். அவையன்றி.

1. படம் பார்த்து விளக்குதல்
2. செயலெதிராகப் பேசுதல்
3. தொடர் நிகழ்வாகப் பேசுதல்
4. சொல் விளக்கப் புனைவு
5. சூழ்நிலைப் பேச்சு
6. பாத்திரப் புனைவு
7. பட்டிமன்றம்

ஆகிய பழகு செயல்களும் பேசுதல் திறனை வளர்ப்பனவாகும். இவை வகுப்பிற்கேற்பத் தரப்படுத்தப்பட்டு வழங்கப்பட வேண்டும். நடைமுறையில் பாடத்திட்டத்தில், தொடக்க வகுப்புகளுக்கே பேசுதலுக்குரிய பழகு செயல்கள் வழங்க வழியுள்ளது. பேசுதல் திறனும் பேச்சுத் திறனும் எல்லா நிலையிலும் மொழிப்பாடத்தின் வழி வளர்க்கப்பட வேண்டிய திறனாகும்.

- **படம் பார்த்து விளக்குதல்**

தொடக்க வகுப்புகளில் நெடுங்காலமாக மேற்கொள்ளப்பெறும் பழகு செயல்களுள் ஒன்று படம்பார்த்து விளக்குதல் ஆகும். குழந்தைகளின் ஆர்வத்திற்கேற்ற படங்கள் காட்டப்படும். குழந்தைகள் அவற்றைப் பார்த்து, தங்கள் கற்பனைக்கு ஏற்ப, புனையுரையாகக் கதை கூறுவர். தொடக்க வகுப்புகளில் இச்செயல்பாடுகளில் குழந்தைகளை ஈடுபடுத்தும்போது அவர்களிடம் காணப்பெறும், தொடக்கநிலைக் குறைபாடுகளைக் களைய வேண்டும். (வெற்றொலி, பிறழ்ந்த ஒலிப்பு போன்றன).

இப்பகுழ செயல் பேசுதல் திறனை வளர்ப்பதற்காக மட்டுமன்றிக் குழந்தைகளின் கற்பனை ஆற்றலை வளர்க்கவும் பயன்படும். குழந்தைகளுக்குக் காட்டப்படும் படங்கள் அவர்களுடைய கற்பனை எல்லைக்கும், காட்சியறிவுக்கும், பொருளறிவுக்கும் உட்பட்டதாக அமைய வேண்டும்.

படம் பார்த்து விளக்கம் சொல்லும் பழகு செயல் தொடக்க வகுப்புகளுக்கு மட்டுமல்லாமல் நடுநிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் வழங்கப்படலாம். அவர்களுக்கு வழங்கப்படுவன அவர்களுடைய அறிவுத் தரத்திற்கு உட்பட்டதாக அமைதல் வேண்டும்.

- **செயலெதிராகப் பேசுதல்**

பேசுதல் திறனை வளர்க்க மேற்கொள்ளப்படும் பழகு செயல்களில் மேம்பட்ட நிலையினைக் கொண்டது செயலெதிராகப் பேசுதல் (4, 5 வகுப்புகள்).

செயலெதிராகப் பேசுதல் எனும் பழகு செயலில் இருவர் பேசவேண்டும். ஒருவர் பேசுவதற்கு மாற்றுரையாக இன்னொருவர் பேச வேண்டும்.

மாற்றுரை.
எதிர்மறைக் கூற்று
எதிர்ச்சொல் கூற்று
அந்தாதிக் கூற்று
வாக்கிய அளவு மாற்றம்

போன்றனவாக அமையலாம். மாற்றுரையைப் பாடப் பொருள் தேவைக் கேற்ப உருவாக்கலாம்.

(எ.கா)

எதிர்மறைக் கூற்று:

| | | |
|---|---|---|
| ஒருவர் | : | நேற்று நான் பாடம் படித்தேன் |
| மற்றொருவர் | : | நேற்று நான் பாடம் படிக்கவில்லை |
| ஒருவர் | : | எனக்கு முறுக்குத் தின்ன விருப்பம் |
| மற்றொருவர் | : | எனக்கு முறுக்குத் தின்ன விருப்பம் இல்லை |

எதிர்ச்சொல் கூற்று

| | | |
|---|---|---|
| ஒருவர் | : | நேற்று நான் பாடம் படித்தேன் |
| மற்றொருவர் | : | இன்று நான் பாடம் படிப்பேன் |
| ஒருவர் | : | எனக்கு முறுக்குத் தின்ன விருப்பம் |
| மற்றொருவர் | : | எனக்கு முறுக்கு தின்ன வெறுப்பு |

அந்தாதிக் கூற்று

| | | |
|---|---|---|
| ஒருவர் | : | நீ எங்கே போகிறாய் ? |
| மற்றொருவர் | : | போகும்போது சொல்லுகிறேன் ? |
| ஒருவர் | : | சொல்லுவதை இப்போது சொல் |
| மற்றொருவர் | : | சொல்ல மாட்டேன் |
| ஒருவர் | : | மாட்டாயா ? |
| மற்றொருவர் | : | மாட்டேன் |
| ஒருவர் | : | ஏன் ? |
| மற்றொருவர் | : | ஏன் என்று கேட்காதே |
| ஒருவர் | : | கேட்டால் என்ன குறை ? |

- **வாக்கிய அளவு மாற்றம்**

வாக்கிய அளவு மாற்றத்தில் ஒருவர் இரண்டு சொற்களில் ஒரு வாக்கியத்தைச் சொன்னால் எதிரிலிருப்பவர் மூன்று சொற்கள் கொண்ட வாக்கியத்தைச் சொல்ல வேண்டும். இச்செயலை மேலும் 4 சொற்கள் 5 சொற்கள் எனக் கூட்டிக் கொண்டே செல்லலாம்.

(எ.கா)

| | | |
|---|---|---|
| ஒருவர் | : | நான் மாணவன் |
| மற்றொருவர் | : | நான் நல்ல மாணவன் |
| ஒருவர் | : | நான் மிகச் சிறந்த மாணவன் |
| மற்றொருவர் | : | எனக்கு இந்த ஊர் முன்பே தெரியும் |

இப் பழகு செயலை விளையாட்டாகவும் கொள்ளலாம். தேர்ந்தறி முறைகளில் ஒன்றாகவும் மேற்கொள்ளலாம்.

- **தொடர் நிகழ்வாகப் பேசுதல்**

இருவர் பங்கேற்கத் தக்கவாறு மேலே காட்டப்பெற்ற பழகு செயல்களைக் குழுவிற்கும் வடிவமைக்கலாம். வரிசை முறையில் ஒவ்வொருவராக வரையறுத்த முறைப்படி பேசுதல் வேண்டும். இப்பழகு செயலில் அந்தாதியாகப் பேசுதல் மிகவும் விறுவிறுப்பையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும்.

- **சொல் விளக்கப் புனைவு**

ஒரு சொல் கூட்டப் படும்போது அதைப் பார்ப்பவர் தமக்குத் தோன்றும் எண்ணங்களை வெளிப்படுத்தும் செயல், சொல் விளக்கப் புனைவு எனப்படும்.

(எ.கா) முடியாது

| | | |
|---|---|---|
| சொல் விளக்கப் புனைவு | : | எனக்கு இச்சொல் பிடிக்காது ; |
| எதையும் | : | முடியாது என்று எண்ணக் கூடாது ;<br>முயன்றால் முடியாததில்லை. |

சொல் விளக்கப் புனைவில், சொற்பொருள், சொல் தொடர்பான விளக்கம் சொல்லுக்குரிய எதிர்ச்சொல், அடங்கு சொல், அடக்கு சொல் போன்றனவும் இடம்பெறலாம். இச்செயல்பாடு பேசுதல் திறனை வளர்ப்பதோடு சொற்களஞ்சியப் பெருக்கத்தை ஏற்படுத்திப் பேச்சுத்திறனுக்கும் அடிகோலும்.

- **சூழ்நிலைப் புனைவுப் பேச்சு**

சூழ்நிலைப் புனைவுப் பேச்சும், பேசுதல் திறனில் மேம்பட்ட நிலையாகும். ஒரு சூழலைச் செயற்கையாகக் கொண்டு பேசப்படும் பேச்சு, சூழ்நிலைப் பேச்சு ஆகும்.

| | | |
|---|---|---|
| கடைக்காரர் | – | பொருள் வாங்குபவர் |
| பேருந்து ஒட்டுநர் | – | நடத்துநர் |
| ஆசிரியர் | – | மாணவர் |
| நேர்காண்பவர் | – | நேர்காணி |

போன்று. இருவர் எதிர்ப்படும் சூழலைச் செயற்கையாகக் கொண்டு அச் சூழலில் மாணவர்களைப் பேசச் செய்து பேசுதல் திறனை வளர்க்கலாம்.

- **பாத்திரப் புனைவுப் பேச்சு**

பாத்திரப் புனைவுப் பேச்சும் சூழ்நிலைப் புனைவுப் பேச்சினைப் போன்றதாகும். சூழ்நிலை புனைவுப் பேச்சில் நடைமுறை வாழ்க்கை நிகழ்ச்சிகள் கற்பனையாகக் கொள்ளப்படுகின்றன, பாத்திரப் புனைவு நாடகப் பாங்கினைப் போன்றது. பேச்சோடு மெய்ப்பாடும் இணைந்தவாறு செயல் நிகழ்கிறது. இச்செயல்பாட்டினைத் தனியாள் செயலுக்கும் குழுச் செயலுக்கும் ஏற்றவாறு வடிவமைக்கலாம். பேசுதல் சார்ந்த உளவியல் குறைபாடுகளை நீக்கவும் இச்செயல்பாடு பயனுடையதாகும்.

- **பட்டி மன்றம் போன்றன**

பள்ளிகளில் நடைபெறும் பட்டிமன்றம் போன்ற கலை நிகழ்ச்சிகளில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்து பேச்சுத் திறனை வளர்க்கலாம். தொடக்க வகுப்புகளில், வகுப்பறை அளவில் கலை, இலக்கிய நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி, குழந்தைகளைப் பங்கேற்கச் செய்யலாம்.

இலக்கிய மன்றம் போன்ற கலை நிகழ்ச்சிகளில் பேசும் குழந்தைகள் அல்லது மாணவர்கள் தொடக்க நிலையில் மனப்பாடம் செய்து பேசுகின்றனர். மனப்பாடத்தைவிடக் குறிப்புகளைக் கொண்டு பேசுதல் சிறப்பு. குறிப்புகளை விரித்துப் பேசும்போதுதான் பேசுதல் திறனும் பேச்சுத் திறனும் வளரும் வாய்ப்பு மிகுதி.

### 3.2.5 பேசுதல் திறனைத் தேர்ந்தறியும் முறைகள்

பேசுதல் திறனை அளக்க வாய்மொழித் தேர்வே ஊடகமாக அமையும். எழுதுமுறை பயன்படாததால் நடைமுறையில் இத்திறன் தேர்வு செய்யப்படாமலுள்ளது. தேர்வில் இடம் பெறாததால் மொழிக் கற்பிப்பில் இத்திறன் தவிர்க்கப்பட்டு வருகிறது. ஆனால் பேசுதல் திறன் எழுதுதல் திறனினும் முதன்மை வாய்ந்ததாகும். எனவே பேசுதல் திறனை அளப்பதற்குரிய அளவைகள் வரையறுக்கப்பட வேண்டும். பேசுதல் திறனை வளர்ப்பதற்காக வழங்கப்படும் செயல்பாடுகளில் அந்த அளவீடுகளைப் பொருத்திப் பேசுதல் திறனை அளவிடலாம்.

கருத்தாடல், பட விளக்கம் கூறுதல், பாத்திரப் புனைவில் பேசுதல் போன்றன பேச்சுத் திறனை வளர்க்கும் செயல்பாடுகளாகும். பேச்சுச் சரளம் ஆகியன பேசுதல் திறனை அளக்கும் அளவீடுகளாகும். துல்லியம், சரளம் ஆகியனவற்றை அளவீடாகக் கொள்ளும் போது இவற்றின் உட் கூறுகளை வரையறுக்க வேண்டும்.

முறையான ஒலிப்பு
பொருத்தமான சொல்லாட்சி
இலக்கணமுடைமை
ஆகியன பேச்சுத் துல்லியத்தின் கூறுகள்
உரிய விரைவு (தயக்கமின்மை)
முன்பின் தொடர்பு
உடனுக்குடன் பதிலுரைத்தல்

ஆகியன சரளத்திற்குரிய கூறுகளாகும். பேசுதல் திறனை அளக்க மேற்காட்டப்பட்ட கூறுகளைக் கொள்வதுபோல,

மொழிநடை
மெய்ப்பாடு
கருத்து

ஆகியனவற்றைப் பேச்சுத் திறனை அளப்பதற்கான அளவுக் கூறுகளாகக்கொள்ளலாம். இவற்றைப் பற்றிய மிகை விளக்ங்களைச் சொற்பொழிவுக் கலை தொடர்பான நூல்களிலிருந்து அறியலாம்.

### 3.2.6 பேசுதல் திறனில் பயிற்சி

திருத்தமாகவும், தெளிவாகவும் பேசுதல் திறனைப் பெறுவதற்குக் கீழ்க்காணும் பயிற்சிகளை வழங்க வேண்டும்.

- **ஆசிரியர் பேச்சு**

ஆசிரியரின் பேச்சு திருத்தமாகவும், தெளிவாகவும் இருத்தல் வேண்டும். திருந்திய பேச்சின் நல்லியல்புகள் யாவும் ஆசிரியரின் பேச்சில் பொருந்தியிருப்பின் மாணவர்களும் அவற்றைப் பின்பற்றக் கூடும். எனவே ஆசிரியரின் பேச்சு முன் மாதிரியாக விளங்க வேண்டும்.

- **நா பிறழ் பயிற்சிகள்**

ஏறத்தாழ ஒத்த ஒலியுடைய சொற்கள் அடுத்தடுத்து வரும் சொற்கள் அமைந்த தொடர்களை விரைவாகவும் பிழையின்றியும் கூறுமாறு பயிற்சியளிப்பதுதான் நா பிறழ் பயிற்சியாகும். எடுத்துக்காட்டாகக் கீழ் உள்ள தொடர்களைக் கூறச் செய்யலாம்.

1. அவனும் அவளும் அவலும் தெள்ளு மாவும் தின்றார்
2. மேல் ஏழு ஓலை, கீழ் ஏழு ஓலை ஆகப் பதினான்கு ஓலை
3. வில்லேருழவர் பகை கொளினும் கொள்ளற்க சொல்லேருழவர் பகை,
4. பலாப்பழம் பழுத்துப் பள்ளத்தில் விழுந்தது.
5. மனம் இசைந்த மணம்.
6. பணம் பழம் பணம், பழம் பணம் பழம்.
7. இயேசுவின் மலை மொழி இனிய மணிமொழி
8. களையெடாதவன் விளைவெடான்,
9. தொழிலாளி வாழ்வு உயரட்டும்

எழுத்துகளின் ஒலி வேறுபாட்டால் பொருள் வேறுபடும். அதனை மாணவர் நன்கு அறிந்து கொள்வதற்கு தவலை. தவளை எனச் சொற்களைக் கூறச்செய்வதுடன் அவற்றின் பொருள் உணரும் வண்ணம் தொடர்களின் அமைத்துக் கூறச் செய்தல் வேண்டும்.

தண்ணீர் எடுப்பது தவலை
தண்ணீரில் இருப்பது தவளை
வாளை என்பது மீனின் பெயர்
வாழை என்பது மரத்தின் பெயர்

இவை போன்று வலை. வளை. வலி/வளி/வழி, ஒலி/ஒளி/ஒழி. கூரை/கூறை, இரங்கு/இறங்கு முதலானவற்றை வாக்கியங்களில் அமைத்துக் கூறினால் ஒலிப்பு அறிவதுடன் பொருளும் அறிவர்.

- **நா நெகிழ் பயிற்சிகள்**

ஒரே வகையான சொற்கள் அல்லது ஒலிகளைப் பலமுறை கூறுமாறு செய்தல் நா நெகிழ் பயிற்சியாகும். இதனால், நாவின் நுனி மேலும் கீழுமாக அசைந்து அவ்வொலிக்குரிய இடத்தில் அமையும் பயிற்சி பெறும். ஒலியை எழுப்பும் முறை திருத்தமடையும்.

ர ர ர ர ர ர ரா
ல ல ல ல ல ல லா
ள ள ள ள ள ள ளா
என்று அகர ஒலியுடனும், பின்னர்
ரி ரி ரி ரி ரி ரி ரீ
ழி ழி ழி ழி ழி ரி ழீ
னி னி னி னி னி னி னீ
ணி ணி ணி ணி ணி ணி ணீ

என்று இகர ஒலியுடனும் இவ்வாறு வெவ்வேறு உயிரெழுத்துடன் சேர்த்துக் கூறச்செய்து பயிற்சியளிக்க வேண்டும்.

2. ஒரே ஒலி பலமுறை அமைந்த சொற்கள் கூறல்

i. 'ல' ஒலி

அவன் நல்லவன் அல்லன்
சொல்லொன்று சொல்லேன்
கல்லிலிருந்து எடுத்தான்

ii. 'ள' ஒலி

தள்ளும் உள்ளம்
தள்ளாடித் தள்ளாடிச் சென்றான்
பள்ளத்தில் உள்ள முள்ளெடு

iii. 'ழ' ஒலி

கீழே விழுந்து அழுதான்
ஏழைக்கிழவன் வாழைப்பழம் வழுக்கி விழுந்தான்
கொழு கொழுத்த வாழை

iv. 'ர' ஒலி

கூரிய அரம்
சீரிய உருவம்
இரவு நேரம்

v. 'ற' ஒலி

காற்றில் கீற்று விழுந்தது.
ஊற்று நீர் கொண்டு வா
காற்று திசை மாறி மாறி வீசியது.

vi. 'ன' ஒலி

மன்னன் என்னென்ன கேட்டான்?
பொன்னார் மேனியனே
இன்னொன்று கேட்டான்.

இம்முறைகளைப் பின்பற்றி மாணாக்கருக்கு வாய்மொழி பயிற்சியளித்து பேச்சில் வல்லவராக்குதல் வேண்டும்.

### 3.2.7 திருந்திய பேச்சின் நல்லியல்புகள்

மனிதனின் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளையும் கருத்துகளையும் பிறர்க்குத் தெரிவிக்கவே மொழி தோற்றுவிக்கப்பட்டது. பேசப் பெறுகின்ற மொழி செம்மையாகவும் திருத்தமாகவும் இருந்தால்தான் கேட்பவரின் உள்ளத்தில் தெளிவாகப் பதியும்.

- **ஒலிப்பு**

செந்தமிழ் மொழியில் மயக்கந்தரும் ஒலியுடைய எழுத்துகள் (மயங்கொலி எழுத்துகள்) சில உள்ளன. ல, ள, ழ, ர, ற, ந, ன, ண போன்ற எழுத்துகள் இடம்பெறும் மயங்கொலிச் சொற்களை ஒலிக்கும்போது கவனத்துடன் ஒலிக்க வேண்டும். எனவே, பேசுகின்ற பொழுது திருத்தமான உச்சரிப்புடனும் தெளிவான ஒலிப்புடனும் பேசப் பழகுதல் சாலச் சிறந்தது.

- **குரல்**

குரலில் படுத்தல், எடுத்தல் முதலான ஏற்றத்தாழ்வுகளை உணர்ச்சி நிலைகளுக்கும், இடத்திற்கும் ஏற்றவாறு அமைத்துப் பேசுதல் வேண்டும். மேலும், கேட்போர் மனம்கொள்ளும் வகையில் குரல் இனிமை பெற்று இயல்பாய் அமைதல் வேண்டும்.

- **வேகம்**

பேசும்போது விரைவாகவும், மெதுவாகவும் இல்லாமல் நிதானத்தைப் பின்பற்றிப் பேசுதல் வேண்டும்.

- **உணர்ச்சி**

"உணர்ச்சியற்ற பேச்சு உப்பில்லா உணவிற்குச் சமம்"; சிறந்த பேச்சனாது உயிரும், உணர்ச்சியும் பெற்றிருத்தல் வேண்டும். பேசும் பொருளின் ஆழத்தையும், இன்றியமையாமையையும் மாணவர்கள் உணருமாறு கருத்திற்கேற்ற உணர்ச்சியுடன் பேசப் பழகுதல் வேண்டும்.

- **அமைதி**

அச்சமோ கூச்சமோ இன்றியும், படபடப்பு இல்லாமலும் அமைதியாகப் பேசுதல் வேண்டும். நல்ல பேச்சில் அமைதியுடன் கூடிய பேச்சின் பண்புகள் நிறைந்திருக்க வேண்டும்.

### 3.2.8 பேசுதல் திறனின் பயன்கள்

- திருந்திய பேச்சு, திருந்திய படிப்பிற்கும் திருந்திய எழுத்திற்கும் வழி வகுக்கும்.
- மொழியை உயிருள்ளதாக்கி மாணவர்களிடத்தே பற்றையும் பாசத்தையும் உண்டாக்கும்.
- குறைந்த காலத்தில் நிறைந்த செய்திகளை அறிந்து கொள்ள உதவும்.
- மொழியின் தனிச்சிறப்புகளை அறிந்து சுவைக்க உதவும்
- அச்சமும், கூச்சமும் நீங்கி மாணவர்கள் தன்னம்பிக்கை பெறவும் உதவும்.

| தன் மதிப்பீடு : வினாக்கள் – I |
|---|
| 1. கேட்டல் திறக் கூறுகள் – குறிப்பு வரைக. |
| 2. வளர்ச்சியின் படிநிலைகளை எழுதுக. |
| 3. கேட்டல் திறனின் பயன்கள் யாவை? |
| 4. பேசுதல் திறனின் நோக்கம் யாது? |
| 5. மாணவர்களைக் குழுச்செயலில் ஈடுபடுத்தும்போது ஆசிரியர் மேற்கொள்ளும் ஊக்குவிப்பு ஊத்திகள் யாவை? |
| 6. பேசுதல் திறனில் அளிக்கப்படும் பயிற்சிகள் குறித்து எழுதுக. |
| 7. பேசுதல் திறனின் பயன்கள் யாவை? |

## 3.3 படித்தல் திறன்

தாய்மொழிப் பயிற்சியில் வாய்மொழிப் பயிற்சிக்கு அடுத்த முக்கியம் வாய்ந்தது படிப்பாகும். "ஓதுவதொழியேல்" என்ற ஔவை பாட்டின் வாக்கில் ஓதுவது என்பது படிப்பதைக் குறிக்கும். கையெழுத்தின் வளத்தைக் கண்ணால் பார்த்து, வாயால் உச்சரித்துப் பொருள் உணர்வதைப் படிப்பு என்கிறோம். படிக்கும் பழக்கத்தை முதல் வகுப்பிலிருந்தே தொடங்க வேண்டும்.

### 3.3.1 படித்தல் திறனின் நோக்கம்

மாணவர்கள் வகுப்பில் திறமையாகப் படிக்கும் பழக்கத்தை மேம்படுத்த வேண்டும். மேலும், தானாகப் படிக்கும் பழக்கத்தையும் உண்டாக்க வேண்டும். அதற்குக் கீழ்க்காணும் இயல்புகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

- சிறந்த ஒலிப்பு
- திருத்தம்
- ஒலியமைப்பு
- உணர்ச்சியுடன் படித்தல்
- நிறுத்தற் குறியீட்டு உணர்வு

முதலான செயல்பாடுகளில் மாணவர்களை ஆசிரியர்கள் ஈடுபடுத்த வேண்டும்.

### 3.3.2 படித்தல் திறனை வளர்க்கும் முறைகள் (கற்பிக்கும் முறைகள்)

படித்தல், திறன் பிற அடிப்படைத் திறன்களைப்போல, கற்றல் காலத்தில் எல்லா நிலைகளிலும் வளருவதாகும். கல்வியியல் அணுகு முறையில் இத் திறன் தளிர் நிலை, வளர் நிலை என இருவகைப்படுத்திக் காணப்படுகின்றன. சரளமாகப் படிக்கும் திறன் பெறும் வரையில் தளிர் நிலை, அத்திறன் பெற்ற பின்னர் வளர்நிலை, தொடக்கப் பள்ளி வகுப்புகளில் இவ்விரு நிலைகளும் கருதத் தக்கனவாகும்.

எழுத்துகளையும், சொற்களையும் இனங்காணுதல், வாக்கியங்களை படித்துப் பொருளுணர்தல், பொருள் சூழல் கொண்டும் இலக்கண அமைப்புச் சூழல் கொண்டும் பொருளறியாச் சொற்களுக்குப் பொருளுணர்தல் ஆகியன படித்தலின் தளிர் நிலையாகும். இந்நிலையில் தோற்றுவாயினைச் செம்மைப்படுத்தல் படித்தலுக்குரிய கண் காண் அளவை வளர்த்தல், பொருள் உணர்விரைவினை மேம்படுத்தல் ஆகியன இடம்பெறும்.

- **தோற்றுவாயினைச் செம்மையாக்கல்**

படித்தலுக்குத் தோற்றுவாய் எழுதிய பகுதியாகும். எழுதிய பகுதிகளின் அளவும் தெளிவும் படித்தலுக்கு ஊக்கமூட்டுவதாக அமைதல் வேண்டும், தொடக்க வகுப்புக் குழந்தைகளுக்குரிய எழுத்தளவு 14– புள்ளி, பதினான்கும் அதற்கு மேலுமுள்ள புள்ளியளவைக் கொண்ட எழுத்துகளே பாட நூல்களில் பெறுகின்றன.

கரும்பலகையில் எழுதும் போதும் மின் அட்டைகளைப் பயன்படுத்தும் போதும் 20 புள்ளிக்கும் குறையாத எழுத்தைப் பயன்படுத்த வேண்டும். மேலும் எழுத்துத் தெளிவும் இன்றியமையாததாகும். குழந்தைகளுக்கு வழங்கப்படும் படிப்புப் பகுதிகளிலும் எழுத்தின் அளவும் தெளிவும் உரியவாறு அமைய வேண்டும்.

படித்தல் திறனின் உட்கூறுகளாகக் குறிக்கப் பெற்ற ஏனைய வளர்நிலைக்கு உரியனவாகும். வளர்நிலையில், குழந்தைகள் சரளமாகப் படிக்கும் ஆற்றலைப் பின் புலமாகக் கொண்டுள்ளனர். இந்நிலை படித்தல் திறனின் உட்திறனை வளர்ப்பதற்காக ஆர்வமூட்டும் பழகு செயல்களை வளர்க்க வேண்டும். படித்தல் பகுதிகளை மீண்டும் மீண்டும் படிக்கச் செய்வதால் படித்தல் திறன் வளராது. ஒரே செயலைத் திரும்பத் திரும்பச் செய்வதால் சோர்வும், செயலில் பின்னடைவும் ஏற்படும். எனவே ஊக்குவிக்கத் தக்க செயல்களையும் இணைத்துப் படித்தல் திறன் வளர்ச்சியை மேம்படுத்த வேண்டும்.

### 3.3.3 படித்தல் திறனின் வகை

வாய்விட்டுப் படித்தல், மனத்திற்குள் படித்தல் எனப் படித்தல் திறன் இருவகைப்படும். இந்த இரண்டு நிலைகளிலும் படிக்கும் திறமையை வளர்த்தல் வேண்டும்.

- **வாய்விட்டுப் படித்தல்**

நூலிலிருக்கும் எழுத்துகளைக் கண்ணால் பார்த்து வாயால் உச்சரித்துப் பொருள் உணர்தலையே வாய்விட்டுப் படித்தல் என்கிறோம்.

**பயன்கள்**

1. பேசுவதற்கு இது துணை யுரியும்.
2. பேசுவதற்குப் பல சொற்களை நூலிலிருந்து எடுத்துக் கொள்ளும்போது இயல்பாகப் பேசுவதற்குப் பயிற்சி ஏற்படுகிறது.
3. ஒரு நாடகத்தைப் பார்த்து அதில் வரும் கதைமாந்தர்களைப் போல் நடித்துப் பேசும் போது வாய்மொழிப் பயிற்சி பயன்படுகிறது.

**நிறைகள்**

1. ஓசை நயத்தையும் செய்யுள் இன்பத்தையும் நன்கு அறிய முடிகிறது.
2. உணர்ச்சியை எழுப்புவதற்குப் படிப்பு துணை செய்கிறது.
3. பெருங்கூட்டத்தில் கூச்சமின்றிப் பேசவும் பழகவும் படிக்கவும் வழிவகைச் செய்கிறது.

**குறைகள்**

1. முதல் இரண்டு வகுப்புக்கு மேல் இத்திறனை வளர்ப்பதில் முயற்சி எடுப்பதில்லை.
2. முதல் இரண்டு வகுப்புக்கு மேல் இத்திறனை வளர்ப்பதில் முயற்சி எடுப்பதில்லை.
3. சொற்களைத் தவறாக உச்சரித்தலும், தெளிவற்ற பேச்சும் குறைகளாகக் காணப்படுகின்றன.

- **மனத்திற்குள் படித்தல்**

ஓலைச்சுவடிகள், கைச்சுவடிகள், அச்சு நூல்கள் ஆகியவற்றை மனத்திற்கு உள்ளேயே வாய் திறக்காமல் உதடுகள், அசையால், தொண்டையின் அசைவு கூட இல்லாமல், ஒலிப்புச் சத்தமின்றிப் படித்தலைத்தான் மனத்திற்குள் படித்தல் என்கிறோம்.

**பயன்கள்**

1. படிப்பின் நோக்கம் கருத்துணர்தலே ஆகும். இதற்குப் பெருந்துணை புரிவது வாய்க்குள் படித்தலாகும்.
2. விரைவும், விரிவும் அமைந்த இவ்வகைப் படிப்பில்தான் கருத்துணர்தல் எளிதில் கைவரப் பெறுகின்றது.

**நிறைகள்**

1. பேச்சுக்கருவிகளுக்கு வேலையின்மை. எனவே உடல் உறுப்புகள் சோர்வடைவதில்லை.
2. படிக்கும் பொருளில் அதிக கவனம் செலுத்தலாம்.
3. படிப்பு விரைந்து செல்வதுடன் கருத்துணரும் ஆற்றலும் வளரும்.
4. அதிகப் பகுதிகளைப் படிக்கலாம்.

**குறைகள்**

1. குரல் பயிற்சிக்கும் உச்சரிப்பில் திருத்தம் பெறுவற்கும் வாய்ப்பு இல்லை.

2. நடித்தல், உரையாடல், பேச்சு சொற்பொழிவுகள் முதலியவற்றிற்குத் துணை செய்யாது.
3. செய்யுள், இலக்கிய நயங்களைப் படித்து இன்புற முடியாது.

### 3.3.4 படிப்பை மேம்படுத்தும் வழிமுறைகள்

- **சொல்முறைப் படிப்பு**

சொல்முறையைக் கண்டறிந்தவர் "காமெனியஸ்" சொல்லின் பொருளை முதலில் கற்பிப்பதால் இது சொல்முறைப் படிப்பு என்று அழைக்கப்படுகிறது. சொற்களை முழுமையாகக் கற்ற பின்னர் அவற்றைக் குறிக்கும் எழுத்துகளைக் கற்கின்றனர்.

**பயன்கள்**

1. சொற்கள் பொருள் உணர்ந்து படிப்பதால் படிப்பில் ஆர்வம் ஏற்படுகின்றன.
2. தெரிந்ததைக் கொண்டு தெரியாததைக் கற்பித்தல் எனும் கொள்கையை ஏற்றுள்ளது.

- **சொற்றொடர் முறைப் படிப்பு**

சொற்றொடர் முறைப் படிப்பு என்பது கதைமுறை எனவும் அழைக்கப்படுகிறது. எளிய சொற்றொடர்கள் பலவற்றைக் கற்றபின், அச்சொற்றொடர்களால் அமைந்த சொற்களையும் கற்பதே சொற்றொடர் முறைப் படிப்பாகும். மொழியின் உறுப்பாகச் சொற்றொடர் காணப்படுகிறது. இது குழந்தைகளுக்கு ஏற்ற இயற்கை முறை ஆகும்.

**பயன்கள்**

1. இயற்கையோடு இணங்கிய முறை
2. சொற்றொடர்களைக் கற்பது மூலம் பொருளைத் தெளிவாக உணருகின்றனர்.
3. படிப்பில் ஆர்வம் ஏற்படும்.
4. தொகுதியினின்று பகுதிக்குச் செல்லல் எனும் உளவியல் முறைக்கு ஏற்ற முறையாகும்.

- **ஆழ்ந்த படிப்பு**

ஒரு மொழியின் அமைப்புகளை முழுமையாக நுணுக்கமாக ஆழ்ந்தும் ஊன்றியும் நன்கு தெளிவாகக் கற்பதே ஆழ்ந்த படிப்பாகும். நுனிப்புல் மேயும் பழக்கம் இம்முறையில் இல்லை. மொழியின் ஒலி அமைதி, சொல் மரபு, தொடர் மரபு, பக்தி மரபு, நடைமுறை இலக்கணம், சொற்களஞ்சியப் பெருக்கம், இலக்கண கூறுகளை உணர்தல், மொழி இயல்பை அறிதல் போன்றவற்றை ஆழ்ந்த படிப்பு நல்கும்.

**பயன்கள்**

1. சொல்லகு, பொருளழகுகளை உணர்ந்து இன்புறுதல்.
2. கருத்துகளின் இனிமையை அறிதல்.

3. மக்களின் குணவியல்புகளை ஆராய்தல்.
4. பாட அமைப்பின் ஒழுங்கையும் தன்மையையும் அறிதல்.

- **அகன்ற படிப்பு**

ஆழ்ந்து படிக்கின்ற பாட நூல்களுடன் விரைவாகவும் வாய்க்குள்ளும் படிக்க வேண்டிய கதைப்புத்தகங்கள், துணைப்பாட நூல்கள், நூலக நூல்கள் ஆகியனவற்றைப் படிக்கும் பிறிதொரு வகை படிப்பிற்கு அகன்ற படிப்பு என்று பெயர்.

**பயன்கள்**

1. பிறர் துணையின்றி விரும்பியவாறு பல நூல்களைப் படித்தல்
2. மனநிறைவும் மகிழ்ச்சியும் அடைதல்
3. விரைவாகப் படிக்கும் திறன் வளர்த்தல்
4. பொது அறிவும் உலக அறிவும் பெறுதல்
5. கற்பனை ஆற்றலையும் படைப்பாற்றலையும் வளர்த்தல்.
6. சொற்களஞ்சியப் பெருக்கம் உண்டாதல்.

- **நூலகப் படிப்பு**

நூலகம் = நூல் + அகம்; பல்வேறு வகையான நூல்களைத் தன்னகத்தே கொண்டுள்ள பகுதியை நூலகம் என்கிறோம். நூலகம் என்பது பல்வேறு தலைப்புகளில் அமைந்த நூல்களை ஓர் ஒழுங்கு முறைப்படி சேகரித்துப் பாதுகாத்து வைக்கும் இடமாகும். ஒவ்வொரு கல்வி நிறுவனத்தின் வளர்ச்சியிலும் மாணவர்களின் அறிவு வளர்ச்சியிலும் நூலகங்களே இதயப்பகுதியாகவும் மூளையாகவும் இய'ங்குகின்றன.

நூலகத்தில் படிப்பதற்கெனத் தனிப்பாட வேளைகளை ஒதுக்கிவைப்பது ஆசிரியர் கடமையாகும். வகுப்பு நூலகம் தனியாக இருக்க வேண்டும். நூலகப் பாடவேளையில் அந்நூலகப் புத்தகங்களை வகுப்பிற்கு எடுத்து வந்து அவற்றை மாணவர்கள் தம் அறிவு நிலைக்கேற்ப அவரவர் விரும்பும் துறை பற்றிய கதை நூல்களை அவர்களுக்கு வழங்கிப் படிக்கச் சொல்ல வேண்டும். கதை படித்து முடிந்த பின் அக்கதை பற்றிய சுருக்கத்தையோ கருத்துகளையோ அதன்வழிப் பெற்ற அறநெறிகளையோ முதலில் கூறுமாறும் பின்னர் எழுதுமாறும் பயிற்சி தரவேண்டும். இப்பயிற்சி பிற்காலத்தில் அச்சிறுவர்களின் வாழ்க்கையில் பெரும் பயனளிக்கும்.

### 3.3.5 படித்தலைத் தேர்ந்தறியும் முறைகள்

தளர் நிலையில் காணப்படும் வாய்விட்டுப் படித்தல் முறையான ஒலிப்பை அறியப் பயன்படுவதாகும். எனினும் ஒலிப்பு முறை பேசுதல் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. எனவே ஒலிப்புத் திறனைத் தேர்ந்தறியப் படித்தலைத் தேர்ந்தறியும் முறைகள் தேவையில்லை.

படித்தலை ஊக்குவிப்பதற்கும், படித்தலைத் தேர்ந்தறிவதற்கும் கீழ்வரும் முறைகள் பயனுடையனவாகும். இவற்றில் பலவற்றைப் பழகு செயல்களாகவும் வழங்கலாம்.

- **முன் வழங்கு வினாக்கள்**

எந்தப் பகுதியைப் படிக்க வேண்டுமோ அந்தப் பகுதிக்காள வினாக்கள் முன்கூட்டியே வழங்கப்பட வேண்டும். படித்த பின்னர் அவ்வினாக்களுக்கான விடைகளை எழுதச் செய்ய வேண்டும். முன்னரே வழங்கப்படும் வினாக்கள், அறிதல், புரிதல், பயன்படுத்துதல், பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடல் ஆகிய பல்வேறு திறக் கூறுகளையும் அளப்பதாக அமைதல் வேண்டும்.

- **வினா அமைத்து விடை எழுதுதல்**

ஒரு படித்தல் பகுதியை மாணவர்களுக்கு வழங்கி, அதிலிருந்து பல்வேறு வினாக்களை வடிவமைக்குமாறும் அவ்வினாக்களுக்கு விடையெழுதுமாறும் செய்யவேண்டும். வடிவமைக்கும் வினாக்களின் அளவிற்கேற்ப் மதிப்பெண்கள் வழங்கப்படலாம். இம்முறையினைக் கற்பிக்கும்போது பழகு செயல்களாவும் வழங்கலாம்.

ஒரு படிப்புப் பகுதி அளவு ஓர் எல்லைக்கு உட்பட்டது. ஆனவு அதிலிருந்து வடிவமைக்கக் கூடிய வினாக்களின் எண்ணிக்கை அளவில்லாததாகும். சிந்தனைத் திறத்திற்கேற்ப, படித்தலின் ஆழ்மை அமையும் எனும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு இச்செயல் மேற்கொள்ளப்படுகிறது,

- **தலைப்பு வழங்கல்**

படித்தல் பகுதியை வழங்கி அதற்குப் பொருத்தமான தலைப்பினை எழுதச் சொல்லுதலே இச்செயல். ஒரு தலைப்பினையோ, பல தலைப்புகளையோ வழங்க செய்யலாம். கருத்துத் தொடர்ச்சி அறிந்து படித்தல் பகுதி, படிக்கப்படுவதை அத்தலைப்போடு துணைத் தலைப்புகளும் வழங்கச் செய்யலாம். இது போன்ற முறை கேட்டல் திறனை வளர்க்கப் பயன்படுத்தப்படுவதாகும். ஆனால் கேட்டலில் பின் படித்தல் நிகழ்கிறது. இங்குக் கற்பவரே படிக்கிறார்.

- **பொழிப்பு எழுதுதல்**

படித்தல் பகுதியில் அடங்கியுள்ள இன்றியமையாத கருத்துகள் படிக்கப்படுவதை அறிய அதன் பொழிப்பினை எழுதச் செய்து திறனை அளவிடலாம். படித்தலின் பல்வேறு திறக்கூறுகள் முன்னர்க் குறிக்கப்பட்டன. அவற்றுள் பொருத்தமான கருத்துகளைத் தேர்ந்தெடுத்தல், பொழிப்பிற்குரிய கருத்துகளைத் திரட்டுதல் ஆகியனவற்றை அளந்தறியப் பொழிப்பு எழுதுதல் முறை பயன்படுகிறது.

- **முடிவு கூறுதல்**

இம்முறையில், தொடர் நிகழ்ச்சிகள் அடங்கிய ஒரு பகுதியை வழங்கி, மாணவர்களைப் படிக்கச் செய்ய வேண்டும். அதன் தொடர்ச்சியாக நிகழத்தக்க பிற நிகழ்ச்சிகளை மாணவர்கள் பட்டியலிட வேண்டும்.

இம்முறையால், பொதுக்கருத்துகளைப் புரிதல், பொருள் தொடர்பினைக் காணுதல், பொருள் நுணுக்கம் காணுதல் போன்ற திறக் கூறுகள் அளக்கப்படுகின்றன, கேட்டல் திறனை வளர்க்கவும் இம் முறை பயன்படுத்தப் படுகிறது. ஆனால் குறுகிய வேறுபாடு உள்ளது. படித்தலில் மீண்டும் படிக்க வாய்ப்புண்டு. கேட்டலில் மீண்டும் கேட்பதற்கில்லை.

- **முன்னுரை வழங்கல்**

படித்தல் பகுதி ஒன்றை வழங்கி, அதற்குரிய முன்னுரையை எழுதச்செய்தல், முன்னுரை வழங்கல் எனப்படும். இம் முறை ஆழ்ந்து படிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்துவதோடு, எழுது திறனையும் வலுப்படுத்துவதாகும்.

- **இடைவெளியை நிரப்பல் (தொடர காலியிடங்கள்)**

இம்முறை கேட்டல் திறனைப் பழகுவிக்கவும் அளக்கவும் பயன்படுத்தப்பட்டதாகும். கேட்டல் திறன் தொடர்பில் இம்முறையைப் பயன்படுத்தும் போது ஆசிரியர் உரைப் பகுதியைப் படிப்பார். ஆனால் இங்குப் படித்தல் பக்தி மாணவர்களிடமே வழங்கப்படுகிறது. கேட்டல் நிலையில் நடத்தப்படும் தேர்வுக்கு உட்படும் மாணவர்கள் கேட்டலின் அடிப்படையிலும், வழங்கப்பட்ட கேட்டல் பகுதியிலுள்ள பிற செய்திகள், இலக்கண அமைப்பு ஆகியனவற்றின் அடிப்படையிலும் அளவிடப்படுகின்றர். இம் முறை கேட்டல் திறனை மட்டும் அளவிடுவதாகக் கருத முடியாது. படித்தல் நிலையில் இத்தேர்வு படித்தலை அடிப்படையாகக் கொண்டே அமைகிறது.

- **தவறுகளைச் சுட்டல்**

தவறுகளைச் சுட்டல் முறையும் கேட்டல் திறன் தொடர்பில் கூறப்பட்டதாகும். கேட்டல் பகுதியின் இடத்தை இங்குப் படித்தல் பகுதி பெறுகிறது. படித்தல் நிலையில் வேறுபட்ட படித்தல் திறன் கூறுகளைப் பழகுவிப்பதற்கும் தேர்ந்தறிவதற்கும் இம்முறை பயன்படுகிறது.

- **ஒப்பிடு செயல்**

ஒரே தலைப்பிலுள்ள வெவ்வேறு உரைப்பகுதிளை மாணவர்களுக்கு வழங்கி அவற்றில் வெளிப்படும் செய்தி, இலக்கண அமைப்பு போன்றவற்றின் ஒற்றுமை, வேற்றுமைக் கூறுகளை எழுதச் சொல்லுதல் ஒப்பிடு செயலாகம். இச் செயல் இடைநிலை, மேல் நிலை மாணவர்களுக்கு உரியதாகும். இம்முறையில் பழக்கம் ஏற்பட, தொடக்கத்தில் எதிர்பார்ப்பு வினாக்களை மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.

- **கிளர் துலங்கல்**

தற்போதைய நடைமுறையில், பொருளுணர் படித்தல் செயல் வழங்கப்படுகிறது. ஆனால் படித்தல் பகுதிக்கான வினாக்கள் பெரும்பாலும் அறிதல் திறன் சார்ந்ததாகவே காணப்படுகின்றன. உயர்நிலை வினாக்கள் வழங்கி பொருளுணர் படித்தலைக் கிளர் துலங்கல் வழி தேர்ந்தறியலாம்.

- **படித்தல் பகுதியை மாற்றி அமைத்தல்**

ஒரு படித்தல் பகுதியை மாணவர்களுக்கு வழங்கி அதன் முறைவைப்பை மாற்றியோ மாற்றாமலோ, வேறு உட்தலைப்புகளுக்குள் எழுதுதல் மாற்றி அமைத்தல் ஆகும். படித்தலில் மேம்பட்ட திறனைப் பழகுவிப்பதாகவும் அளப்பதாகவும் இம் முறை அமையும்.

### 3.3.6 படித்தலின் நோக்கங்கள்

1. கற்றலில் ஆர்வத்தைப் பெருக்குதல்
2. பொதுஅறிவை வளர்த்தல்
3. கற்றலில் மகிழ்ச்சியையும் ஈடுபாட்டையும் உண்டாக்குதல்
4. குறிப்பெடுக்கும் பழக்கம் உண்டாதல்
5. பிற்கால வாழ்க்கைக்கு நூலகப் படிப்பு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

நூலகப் படிப்பில் நிறைகளும், குறைகளும் உண்டு.

### 3.3.7 படித்தல் முறைகளும் நிலைகளும்

கல்வியியல் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் போன்றன இடம் பெறுகின்றன. எனினும் கல்வி பெற்றவர்களைக் குறிக்க படித்தவர் எனும் சொல்லே பயன்படுத்தப்படுகிறது. கல்வியில் படித்தல் மேன்மையாகக் கருதப்படுவதை இப் பயன்பாடு உணர்த்துகிறது. ஒருவருக்குப் படித்தல் ஆர்வம் இருப்பின் அவர்,

1. அறிவுத் தொகுதிகளைப் பெறுதல்
2. ஓய்வு நேரங்களையும் பயனுறக் கழித்தல்
3. பிறருக்கு வழிகாட்டல்

போன்ற செயல்களில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள இயலும். ஆகவே கல்வித் தொடக்க காலத்திலிருந்து எல்லா நிலைகளிலும் படித்தலில் மாணவர்களை ஊக்குவிக்கப்பட வேண்டும்.

தொடக்க நிலையில் வாய்விட்டுப் படிக்கப் பழக்கம் கொண்டிருக்கும் குழந்தையை வாய்க்குள் படிக்கப் பழக்குதல் வேண்டும். வாய்க்குள் படிக்கும் பழக்கம் ஏற்பட்ட பின்னர், படித்தலின் அளவு. விரைவு ஆகியனவற்றை பெருக்கும் வழிவகைகளைக்

கானவேண்டும். பாட நூல்களை மட்டுமே படித்தல் பொருளாகக் கருதாமல் இதழ்கள், அறிக்கைகள், துணை நூல்கள் ஆகியனவற்றையும் மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.

1. படித்த பகுதியிலுள்ள மொழிநடையைப் புரிதல்
2. அதன் கண் வெளிப்படும் கருத்துகளை எழுதியவர் நிலையிலிருந்து புரிதல்,
3. நிமிடத்திற்கு 200 முதல் 300 சொற்களைப் படித்தல்,
4. படிக்கும் போக்கில் தேவையான இடங்களில் மேலோட்டப் படிப்பினையும் உள்ளோட்டப் படிப்பினையும் மேற்கொள்ளல்
5. படிக்கும் போக்கில் எதிர்வரும் மொழியமைப்பினையும் செய்தித் தொடர்பினையும் ஏரண முறையில் ஊகித்தல்.
6. அறிமுகமில்லாச் சொற்களுக்கும் பொருத்தமான பொருளை ஊகித்தல்.
7. படித்தல் பகுதிக்குரிய பின்புலச் செய்திகளை அறிதல்.
8. ஆர்வமுடனும் உட்பொருள் அறி முனைப்புடனும் படித்தல்
9. மன நிறைவுடனும் எழுச்சியுடனும் படித்தல்
10. படிப்புப் பகுதிக்கேற்ப படித்தல் முறைகளை மாற்றுதல்

ஆகியன சரளமாகப் படித்தலுக்குரிய பண்புகளாகும். இவற்றை மாணவர்களிடை வளர்ப்பதற்கு ஆசிரியர்கள் மாணவர்களின் முதிர்ச்சிக் கேற்ற முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

### 3.3.8 படித்தல் திறனின் பயன்கள்

1. பேசுவதற்கு இது துணைபுரியும்.
2. பேசுவதற்குப் பல சொற்களை நூல்களிலிருந்து எடுத்துக்கொள்ளும்போது இயல்பாகப் பேசுவதற்குப் பயிற்சி ஏற்படுகிறது.
3. பொருள் உணர்ந்து சொற்களைப் படிப்பதால் படிப்பில் ஆர்வம் ஏற்படுகின்றது.
4. தெரிந்ததைக் கொண்டு தெரியாததைக் கற்பித்தல் எனும் கொள்கையை ஏற்றுள்ளது.
5. இயற்கையோடு இணங்கிய முறை
6. சொற்றொடர்களைக் கற்பதன் மூலம் பொருளைத் தெளிவாக உணருகின்றனர்.
7. படிப்பில் ஆர்வம் ஏற்படும்.
8. தொகுதியினின்று பகுதிக்குச் செல்லல் எனும் உளவியல் முறைக்கு ஏற்ற முறையாகும்.

## 3.4 எழுதுதல் திறன்

மொழிப் பயிற்சியில் படிப்பதற்கு அடுத்த நிலையில் கற்பிக்கப் பெற வேண்டிய ஒன்று எழுத்துப்பயிற்சியாகும். நேரில் இருப்பவர்களுக்குப் பேசுவதன் மூலம் எண்ணங்களை வெளியிடுகின்றோம். நேரில் இல்லாதவர்களுக்கு எழுத்து மூலமாக எண்ணங்களைத் தெரிவிக்கின்றோம். மடல்கள் வரையவும், நூல்கள் இயற்றவும் அறிஞர்

பெருமக்களின் எண்ணங்களையும் ஆய்வுரைகளையும் வெளியிடவும் உதவியாய் இருப்பது எழுத்து ஆகும்.

ஒரு மொழியிலுள்ள ஒலிகளை வரிவடிவங்களாக அமைப்பது எழுத்தாகும். வரிவடிவ எழுத்துகளை எழுதிக் காட்டச் செய்தலே எழுத்துப் பயிற்சியாகும்.

எழுதுதல் என்பது எக்காலத்திலும் நிலைத்திருக்கும், இடம் கடந்தும் காலம் கடந்தும் தொடர்பு கொள்ள முடியும், இதுவே எழுதுதல் திறனின் முக்கிய நோக்கமாகும்.

### 3.4.1 எழுதுதல் திறனின் முறைகள்

மாணவர்கள் செறிவுடனும் அழகுடனும் விரைவுடனும் எழுதக் கற்றுக் கொண்ட பிறகு தக்க பயிற்சிகளை அளிக்க வேண்டும்.

- **பார்த்து எழுதுதல்**


குழந்தைகள் எதைப் பார்த்தாலும் அதன்படியே பார்த்து எழுத விரும்புகின்றனர். இவ்விருப்பத்தை ஆசிரியர்கள் வளரச் செய்து பயன்படும் முறைகளில் கொண்டு செல்லுதல் வேண்டும். முதலில் பெயர்கள் எழுதிய படங்களைக் குழந்தைகளுக்குக் காட்டி வரையச் செய்யலாம்.

1. கையெழுத்து திருத்தமாய் அமையப் பயற்சி தரலாம்.
2. விரைந்து எழுதுவதற்குப் பயிற்சி தரலாம்.
3. உற்று நோக்கும் திறன் வளரும்.
4. எழுத்துக் கூட்டி எழுதுவதற்கு உதவும்.
5. சொல்லிக் கொண்டே எழுதுவதால் நல்ல மொழிப் பயிற்சி வளரும்


- **வரியொற்றி எழுதுதல்**

கையெழுத்துச் சிறந்து விளங்குவதற்கு வரியொற்றி எழுதுதல் சிறந்த பயிற்சி ஆகும். இருகோடுகள் அல்லது நான்கு கோடுகள் இட்ட குறிப்பேட்டில் எழுதுமாறு செய்தல் வேண்டும். மாணவர்கள் நாள்தோறும் இப்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். நான்கு கோடுகளில் எழுதிப் பழகிய பின்னர் இருகோடுகளில் எழுதிப் பழகலாம். அச்சிட்ட பயிற்சியேடுகளையும் பயன்படுத்தலாம்.

நடுப்பகுதி எழுத்துகள்




நடு கீழ்ப்பகுதி எழுத்துகள்




நடுமேற்பகுதி எழுத்துகள்




முப்பகுதி எழுத்துகள்




- **சொல்வதை எழுதுதல்**

ஆசிரியர் சொல்வதைக் கேட்டு மாணவர்கள் பார்க்காமல் எழுதுவதையே சொல்வதை எழுதுதல் எனப்படும். பார்த்து எழுதுவதைவிடக் கேட்டு எழுதுதலில் சுறுசுறுப்பும் விரைவும் அதிகமாக ஏற்படும். மாணவர்களின் ஆர்வம், எழுதும் வேகம், கேட்டல் திறன் ஆகியவை இதனால் மேம்படும். சொல்வதை எழுதுவதில் ஆசிரியர் சொல்ல மாணவர் கேட்டு எழுதுதல், மாணவர் சொல்ல மாணவர் எழுதுதல், பிறர் சொல்வதைக் கேட்டு எழுதுதல், தொலைக்காட்சி மற்றும் ஒலிநாடாக்களைக் கேட்டு எழுதுதல் ஆகியவை அடங்கும்.

கேட்டு எழுதுவதன் மூலம் எழுதுவதில் வேகம் கூடும், கருத்துணர்ந்து எழுதும் ஆற்றல் மேம்படும், கேட்கும் பொருள் மனதில் நன்கு பதியும், ஒலி வேறுபாடுகளை

மாணவர்கள் அறிவர். பிழைகளில்லாமல் எழுதும் பயிற்சி ஏற்படும். செவிப்புலன் உணர்ச்சி தூண்டப்படும், நினைவாற்றல் வளரும்.

### 3.4.2 எழுதுதல் திறனின் பயிற்சி

எழுதுதல் திறனைப் பெறுவதற்குப் பல வகைகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அவற்றுள் தசைப்பயிற்சி, விரலால் கிறுக்குதல், எளிய படங்கள் வரைதல், வெட்டி ஒட்டுதல் சிறந்த பயிற்சிகளாகும்.

- **தசைப்பயிற்சி**

கைவிரல்கள் மற்றும் மணிக்கட்டுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். இதற்காகப் புத்தகங்களை அடுக்கவும், தூக்கி வைக்கவும் செய்யலாம். அப்போது தசைநார்கள் நன்கு வளர்ச்சியடையும்.

- **விரலால் கிறுக்கச் செய்தல்**

தரையில் மணலைப் பரப்பி அதன்மேல் வலது ஆட்காட்டி விரல் கொண்டு அவர்கள் விருப்பம் போல் எழுதுமாறு பயிற்சி செய்தல் வேண்டும்.

- **எளிய படங்கள் வரைதல்**

பரங்கிக்காய், மரங்கள், ஆரஞ்சு, ஏணி முதலிய படங்களை வரையச் செய்து தசைநார்களை வலுப்பெறச் செய்யலாம்.

- **வெட்டி ஒட்டுதல்**

அட்டையில் பல உருவங்களை வெட்டி எடுத்துவிட்டு அந்த அட்டையை ஒரு தாளின்மேல் வைத்து வண்ணப்பென்சிலால் உருவத்தை உண்டாக்குதல் வேண்டும். உருவங்களை வரையவும் உருவங்களின் இயல்புகளைப் புரிந்து கொள்ளவும் இப்பயிற்சி உதவும்.

### 3.4.3 நல்ல கையெழுத்தின் இயல்புகள்

இடமிருந்து வலமாக எழுதப்பெறும் மொழி நம் தமிழ் மொழியாகும். இம்மொழியில் எழுத்துகள் வட்ட வளைவு, சுழி, மேற்கோடு ஆகிய பல அமைப்புகளைக் கொண்டுள்ளன.

- **தெளிவு**

படிப்பவர் புரிந்துகொள்ளும் வகையில், எழுத்துகளைத் தனித்தனியாக எழுதுதல் வேண்டும். எழுத்துக்களுக்கு உரிய உருவங்களைச் சிதைக்காமல், கூட்டாமல், குறைக்காமல் சரியான இடைவெளி ஏற்படுத்தி எழுத வேண்டும். மேலும், தேவையான இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுதல் வேண்டும். இக்கூறுகளை நன்கு கவனித்து எழுதினால் எழுத்தில் தெளிவு வரும்.

- **அளவு**

எழுத்துகள் ஒரே அளவாய், சீராய் இருந்தால் அதுவே ஒரு தனியழகாக இருக்கும். ஒரு வரியில் பெரியதாகவும், மறு வரியில் சிறியதாகவும், சில வரிகளில் இடைப்பட்டதாகவும் எழுதினால் பார்ப்பதற்கே வெறுப்பாகத் தோன்றும். எழுத்துகளின் உருவங்கள் சரியாய் அமைவதோடு மேற்கோடு, சுழி முதலியவையும் ஒரே அளவாய் அமைதல் வேண்டும். எழுத்துக்கு எழுத்து, சொல்லுக்குச் சொல், வரிக்கு வரி இடைவெளி விட்டு ஒரே அளவாக எழுத வேண்டும்.

- **விரைவு**

எழுத்துகள் அழகாகவும், தெளிவாகவும் இருக்க வேண்டுமென்பதற்காக மிகவும் மெல்ல நிறுத்தி எழுதக்கூடாது. தெளிவாகவும் விரைவாகவும் எழுதி, அழகையும் கூட்ட வேண்டும். ஆசிரியர் ஒரு பகுதியை எழுதச் சொல்லி நிறுத்து என்றதும் நிறுத்தச் செய்து எடுத்துக் கொண்ட கால அளவைக் கணக்கிட்டு மாணவர்களிடம் உள்ள எழுத்து விரைவைக் கணக்கிடலாம். எழுத்து விரைவை அதிகரிக்கச் செய்தல் ஆசிரியரின் கடமையாகும்.

- **அழகு**

இடைவெளிகள் விட்டு எழுதுகின்றபொழுது பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். தேவையற்ற முறையில் சிலவற்றைச் சேர்த்து எழுதுவதையும் கோடுகளை வளைத்தும் நீட்டியும் எழுதுவதையும் தவிர்த்தல் சிறந்தது. புள்ளிகளை வட்டமாகச் சிலர் எழுதுவர். இவ்வாறு எழுதக் கூடாது. முத்து முத்தாய் எழுதினால் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். ஒருவரது கையெழுத்தைக் கொண்டே அவரது குணவியல்புகளைக் கூறலாம் என்கிறார்கள்.

- **இடைவெளி**

சொல்லுக்குச் சொல் இடைவெளி விட்டு எழுதுதல் வேண்டும். பத்தியைத் தொடங்கின்றபொழுது பாதியிலிருந்து தொடங்குதல் வேண்டும். இடைவெளி விட்டு எழுதுகின்ற எழுத்து அழகுடன் விளங்கும். எழுத்துகளின் ஒழுங்கு வரிசையை வீதியின்கண் அமைந்த மாடமாளிகையின் வரிசைக்கு ஒப்புமைகாட்டிப் புலப்படுத்தியிருக்கிறார் தமிழ்ப் புலவர் கச்சியப்ப முனிவர்.

| பெட்டிச் செய்தி |
|---|
| தமிழ்த் தட்டச்சு செய்வதன் மூலம் எழுதுதல் திறனில் சிறப்பாகப் பயிற்சி பெற முடியும் |

### 3.4.4 எழுதுதல் திறனின் பயன்கள்

1. கையெழுத்து திருத்தமாய் அமைவதற்கு வழி வகுக்கும்
2. விரைவாக எழுதுவதற்குப் பயிற்சியாக அமையும்.
3. மனத்தை ஒரு நிலைப்படுத்தும் ஆற்றல் வளரும்.
4. கருத்து வளம் ஏற்பட வழி வகுக்கும்.

5. உற்றுநோக்கும் திறன் வளரும்.

## 3.5 மொழிபெயர்ப்பும் மொழியாக்கமும்

அடிப்படை மொழித்திறன்களில் நன்கு பயிற்சி பெற்றப்பின் மாணவர்களுக்கு மொழிபெயர்ப்பும் மொழியாக்கமும் பற்றி புரிய வைப்பது சிறந்த மொழி ஆற்றலை வளர்ப்பதாகும்.

### 3.5.1 மொழிபெயர்த்தல்

அறிவுப் பெருக்கம் நிகழ்ந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் கருத்துகளும் தோன்றியவாறுள்ளன. ஒரு மொழியினரால் கண்டறியப்பட்ட அல்லது எடுத்துரைக்கபட்டவை அவர் மொழியிலிருந்து (தருமொழியிலிருந்து) இன்னொரு மொழிக்கு (பெறுமொழி) வந்தடைய மொழிபெயர்ப்பு இன்றியமையதாகிறது. எனவே, தருமொழியிலிருந்து பெறுமொழியில் எழுத ஒரு மொழி அறிவு தேவைப்படுவதோடு, அவற்றை மொழிபெயர்த்து எழுதும் முறைகளின் அறிவும் தேவை.

தற்போதுள்ள நிலையில், பெரும்பாலும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து எழுதும் திறனை மொழிக் கல்வியில் வளர்த்தல் கற்பிப்பு நோக்கங்களுள் ஒன்றாகும். மொழிபெயர்ப்பு முறைகளை அறியும் முன்னர், மொழி பெயர்ப்பு நிலைகள், வகைகள், பொருந்து நிலைகள் ஆகியன பற்றித் தெரிதல் வேண்டும்.

### 3.5.2 மொழிபெயர்ப்பு நிலைகள்

நடைமுறையில் எழுதியதை மொழிபெயர்த்தல், பேசும்போது மொழிபெயர்த்தல் என இருநிலைகள் மொழிபெயர்ப்பில் உள்ளன.

- **எழுதியதை மொழிபெயர்த்தல்**

'மொழிபெயர்ப்பு' எனும்போது எழுதியதை மொழி பெயர்த்தலே குறிக்கப்படுகிறது. மொழிப் பாடத்திட்டத்தில் எழுதியதை மொழி பெயர்க்கும் திறனை வளர்ப்பதே மொழிப்பாட நோக்கங்களுள் ஒன்றாகக் கொள்ளப்படுகிறது. ஒரு மொழியில் எழுதப்பட்டதைப் பொருள் புரியப் படித்து, அவற்றை இன்னொரு மொழியில் – அதாவது தருமொழியிலிருந்து பெறுமொழியில் எழுதுவதை இது குறிக்கும்.

- **பேசும்போது மொழிபெயர்த்தல்**

ஒருவர் பேசும்போது, இடையிடையே அவர் பேசியதை இன்னொரு மொழியில் தருவதும் மொழி பெயர்ப்பின் ஒரு நிலையாகும். இது, முதலில் குறிப்பிட்டதிலிருந்து கடினமான செயலாகும். எழுதியதை மொழிபெயர்க்கும் போது, பொருளையும் மொழியமைப்பையும் மீண்டும் மீண்டும் நோக்கிச் செம்மையாக மொழிபெயர்க்க இயலும்.

### 3.5.3 மொழிபெயர்ப்பு வகைகள்

மொழிபெயர்ப்பு பொதுவாக செய்தி நீர்மை மொழிபெயர்ப்பு, வாக்கிய நீர்மை மொழிபெயர்ப்பு என இருவகைப்படும்.

- **செய்தி நீர்மை மொழிபெயர்ப்பு**

தருமொழியிலுள்ள செய்தியை, பெறுமொழியில் செய்திக்கு முதன்மையிடம் கொடுத்து வெளிப்படுத்துவதாகும். கடிதங்கள், அறிக்கைகள் போன்றனவற்றிற்கு இம்மொழிபெயர்ப்புப் பொருந்துவதாகும். இவ்வகை மொழிபெயர்ப்பில் தருமொழியிலுள்ள சொற்கள், சொற்றொடர்கள் வாக்கியங்கள் ஆகியனவற்றிற்கு இணையான சொற்கள் பெறுமொழியிலும் காணப்படும். வாக்கிய அமைப்பு மாற்றங்கள் தவிர பிறவகையான மொழி மாற்றங்கள் இவ்வகை மொழிபெயர்ப்பில் காணப்படாது.

The State shall endeavor to provide, within a period of
Ten years from the commencement of this Constition, for
Free and compulsory education for all children until they
Complete the age of fourteen years.

எனும் பகுதி,

இந்த அரசியல் சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டதிலிருந்து, பத்து ஆண்டுகளுக்குள், பதினான்கு வயது முடியும் வரையில் அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச கட்டாயக் கல்வி அளிக்க மாநில அரசு முயலும்.

என்பது செய்தி நீர்மை மொழிபெயர்ப்பாகும். தருமொழியிலுள்ள சொற்களுக்கு இணையான சொற்கள் பெறுமொழியிலிருப்பினும் மொழியமைப்புக் கருதி, அவை இடமாற்றம் பெற்று, தருமொழிப் பகுதியில் பொருள் மாற்றமின்றி பெறுமொழிப் பகுதியில் அமைந்துள்ளதை நோக்கலாம்.

- **இலக்கிய நீர்மை மொழிபெயர்ப்பு**

தருமொழியிலுள்ள கருத்துகளையும் மொழிகையும் கருத்திற்கொண்டு, பெறுமொழியில் அவற்றை மேற்கொண்டு மொழிபெயர்ப்பதே இலக்கிய நீர்மை மொழிபெயர்ப்பாகும். இவ்வகை மொழிபெயர்ப்பு, உரைநடை, செய்யுள், உரையாடல் போன்ற பல்வேறு இலக்கிய வடிவங்களுக்கு மேற்கொள்ளப்படுவதாகும். இவ்வகை மொழிபெயர்ப்பை மேற்கொள்ள இரு மொழிகளிலும் நிகர்த்த மொழியறிவு தேவை.

#### வாக்கிய அமைப்பைக் கருத்தில் கொள்ளல்

('He is a man') என்பதை 'அவன் இருக்கிறான் ஒரு மனிதனாக' என மொழிபெயர்ப்பதோ, 'அவன் ஒரு மனிதனாக இருக்கிறான்' என மொழிபெயர்ப்பதோ

'அவன் ஒரு மனிதன்' என மொழிபெயர்ப்பதோ தவறாகும். 'அவன் மனிதன்' என்பதே தமிழ் மொழியமைப்பிற்கிணங்கியதாகும்.

### மொழி அமைப்பு மரபு மேற்கொள்ளல்

தருமொழி, பெறுமொழி ஆகியன தமக்கெனக் கொண்டுள்ள மொழி அமைப்பு மரபுகள், மொழிபெயர்ப்பில் சிக்கலை ஏற்படுத்துகின்றன.

Where do you stand in your family?

என்பதை, வாக்கிய அளவில் மொழிபெயர்த்தால்,

'நீ உங்கள் குடும்பத்தில் எங்கே நிற்கிறாய்?' என அமையும். ஆனால் தமிழில் இவ்வாக்கியத்தின் பொருள் 'நீ உங்கள் வீட்டில் எத்தனையாவது பிள்ளை?' என்பதாகும்.

### இலக்கியத் தன்மை ஊட்டல்

மொழிபெயர்ப்பு ஓர் அரிய கலையாகும். மொழிக்கு மொழி அகராதிகள் தயாரிக்கப்படுவதைப் போல மொழிக்கு மொழி, மொழி பெயர்க்கும் முறைகளை வகை தொகை செய்து தரும். மொழி மாற்ற முறைக்கு கையேடுகள் உருவாக்குவது மொழிவளர்ச்சிக்கு ஆற்றும் தொண்டாக அமையும். மொழிபெயர்ப்புக்கலை வளரும் வகையில் பல்வேறு அறிஞர்கள் தத்தம் போக்கிற்கேற்ப கருத்துகளைத் தந்துள்ளனர். அவற்றை நுணுகி ஆய்ந்து, அவற்றை அடிப்படையாகக் கொண்ட பயிற்று முறைகளை வரையறுப்பது, தமிழ்க் கல்வியாளர்கள் எதிர்நோக்கும் பணியாகும்.

## 3.5.4 மொழியாக்கம்

மொழி கற்பிப்பதில், மொழிபெயர்ப்பைப் போன்றே மொழியாக்கம் இன்றைய சூழலில் பாடத்திட்டத்தில் மிகுதியும் அழுத்தம் தரப்படவேண்டிய ஒன்றாகும்.

ஒரு மொழியில் புதிய சொற்களை உருவாக்குதல், மொழியாக்கம் அல்லது கலைச் சொல்லாக்கம் எனப்படும் (மொழி – சொல்). இவ்வரையறையிலிருந்து, 'மொழியில் சொற்கள் இல்லையா?' போன்ற வினாக்கள் எழக்கூடும்.

தமிழ் மக்களின் உணவுப் பழக்கங்களால், ஆப்பம், இட்லி, தோசை போன்ற சொற்கள் தமிழில் தோன்றின. ஆங்கிலத்தில் cake, bread போன்ற சொற்கள் உள்ளன. தமிழில் இல்லை. இவ்வாறே, நிலவிவரும் கருத்துகளுக்கேற்பவும், தோன்றும் கருத்துகளுக்கு ஏற்பவும் அவ்வப்போது மொழியில் புதிய சொற்கள் உருவாகின்றன. சொற்கள் இயல்பாகவே உருவாகவும் கூடும்.

புதிய சொற்களை உருவாக்குவது, மொழியறிவு சார்ந்த உயர் திறனாகும். இத்திறன், மொழிப்புலமை, துறையறிவு ஆகிய இரண்டும் இணைந்து பெறப்படுவதாகும்.

மொழியாக்கத் திறனைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, மொழியாக்க முறைகள், பண்புகள், கற்பிப்பு முறைகள் ஆகியன பற்றிய தெளிந்த அறிவு தேவை.

### 3.5.5 மொழியாக்க முறைகள்

தமிழ் மொழியில் காலப்போக்கில் இயல்பாகப் புதிய சொற்கள் தோற்றம் பெரினும், (Screw driver – திருப்புளி) காலத்தேவை நோக்கி அவ்வப்போது, தமிழறிஞர்களாலும், பல்துறை அறிஞர்களாலும் சொற்கள் உருவாக்கப்படுகின்றன. சொற்கள் உருவாக்கப்படுவதற்கு முறைகள் வரையறுக்கப் படாமலிருந்தாலும் இந்நாள்வரை ஆக்கப்பட்ட சொற்களிலிருந்து சில பொது வழிமுறைகளைக் காண முடிகிறது. அம்முறைகள் பெரும்பாலும் ஒலி பெயர்ப்பு, மொழி பெயர்ப்பு, கருத்துப் பெயர்ப்பு, பழஞ்சொல் தேர்வு என அமைகின்றன. இவையின்றி பிற முறைகளை வரையறுத்துக் காண்பது மொழி வளர்ச்சி முனைப்புடையோரின் கடனாகும்.

- **ஒலி பெயர்ப்பு**

ஒரு மொழியில் ஒரு சொல் எவ்வாறு ஒலிக்கப்படுகிறதோ அவ்வாறே 'மொழியாக்கம்' பெற்றுப் பிறமொழியிலும் ஒலிக்கப் பெறுவதே 'ஒலி பெயர்ப்பு' ஆகும். Cycle, Car, Tea போன்றன. சைக்கிள், கார், தே(யிலை) எனத் தமிழில் வழங்கப்படுகின்றன. இது ஒலிபெயர்ப்பு முறையின் பாற்படும்.

- **மொழிபெயர்ப்பு**

தமிழில் பெரிதும் மேற்கொள்ளப்பட்டு வரும் மொழி ஆக்க முறை, 'மொழிபெயர்ப்பு' முறையாகும். மொழிபெயர்ப்பிற்கு ஆங்கிலமே பெரும்பாலும் தருமொழியாக உள்ளது.

Telephone, Television போன்றன. தொலைபேசி, தொலைக்காட்சி எனத் தருமொழியின் பொருள் மொழிபெயர்ப்பாக அமைகின்றன. இம்முறை ஒலிபெயர்ப்பு முறைக்கு அடுத்த நிலையில் ஆக்க எளிமையுடையதாகும்.

- **கருத்துப் பெயர்ப்பு**

ஒரு மொழியில் உள்ள கலைச் சொற்கள் பிறிது மொழிக்கும் தேவையாகும் போது, அச்சொல் உணர்த்தும் பொருள் தன்மையை அடிப்படையாகக் கொண்டு, அதற்கேற்றவாறு புதிய சொல்லைப் படைத்துக் கொள்ளுதல் 'கருத்துப் பெயர்ப்பு' முறையாகும்.

**(எ.கா)**

'Bus' என்னும் சொல்லை 'பஸ்' என ஒலி பெயர்ப்பாக ஏற்பின் 'ஸ்' எனும் வடமொழி ஒலியைக் கொள்ள வேண்டுவதாகிறது. இதைத் தவிர்த்து 'பசு' என மாற்றின் பொருள் மாற்றம் ஏற்படுகிறது. எனவே, இச்சொல் 'பேருந்து' என, அச்சொல் குறிக்கும் பொருளின் தன்மையை வெளிப்படுத்தும் சொல்லாக 'மொழியாக்கம்' பெற்றுள்ளது.

### 3.5.6 மொழியாக்கப் பண்புகள்

மொழியாக்கத்தின் பண்புகளான அளவு, இனிமை, சீர்மை, தெளிவுடைமை பற்றி விளக்கப்படுகின்றன.

- **அளவு**

புதிய சொற்களின் நிலைப்புத் தன்மைக்கு அதன் 'அளவு' இன்றியமையாததோர் ஏதாகும். ஓரசை, ஈரசை, மூவசை என அசையை அடிப்படையாகக் கொண்டு அளவு குறிக்கப்படுகின்றது. சொல்லின் அளவும் நிலைப்புத் தன்மையும் எதிர் விகிதத்தில் அமையும்.

- **இனிமை**

'இனிமை' என்பது ஒலிப்பின் இனிமையைக் குறிப்பதாகும். தமிழ் இலக்கணங்கள் வரையறுத்துத் தந்த மொழி முதல், இடை, கடை எழுத்துகள் மொழியின் எளிமையைக் காப்பதற்கென்றே அமைந்துள்ளவெனன் கொள்ளலாம். இலக்கண நூற்கள் தரும் அவ்விதிகளை மீறாதவாறு உருவாக்கப்படும் சொற்கள் ஒலிப்பு இனிமை கொண்டதாகவே அமையும்.

சொல் 'எளிமை'க்காக கருதப்பட வேண்டிய மற்றுமோர் சிறப்புக் கூறு.

- **சீர்மை**

'சீர்மை' என்பது ஒழுங்கு நிலையைக் குறிக்கும். தமிழ்ச் சொற்களில் விகுதிகள் சில ஒழுங்கு முறைக்கு உட்பட்டே அமைவதைக் காணலாம். தொழில் பெயர்கள் 'அல்' விகுதியிலும் பண்புப் பெயர்கள் 'மை' விகுதியிலும் பெரும்பாலும் அமைந்திருப்பதைக் காணலாம். சொல்லாக்கத்திலும் இவ்வாறாக ஒழுங்கு முறைகளை வரையறுத்துக் கொண்டு சீர்மைப் பண்பை மேற்கொள்ளல் வேண்டும்.

'சொல்லாக்கம்' மேற்கொள்ளும் போது, புதிய சொற்களின் பொருள் தன்மைக்கு ஏற்ப, சொற்களில் விகுதிகள் 'சீர்மை'யோடு அமைதல் வேண்டும்.

சொல்லாக்கச் சீர்மை, பொருள் தன்மைக்கு எற்ப அமைவது போல, பாடப் பொருளுக்கு ஏற்பவும் அமைதல் வேண்டும். இச்சீர்மை விகுதிகள், முதல்நிலை, ஒலிப்பு ஆகியனவற்றின் அடிப்படையில் அமையலாம். எடுத்துக்காட்டாக, Mean, Median, Mode ஆகிய மையப் போக்கு அளவைகள் நடுவு, அகடு, முகடு என ஒலிச்சீர்மை பெற்றுள்ளன. வகை தொகை நெறி சார்ந்த அறிவுக்களக் கூறுகளான Knowledge, Understanding, application, skill என்பன 'அறிதல்', 'புரிதல்', 'பயன்படுத்துதல்', என அல் விகுதிகளின் சீர்மை கொண்டுள்ளன.

- **தெளிவுடைமை**

உருவாக்கப்படும் புதிய சொல், பொருள் மயக்கம் தராமலும், மொழிப்பயன்பாட்டின் அனைத்துச் சூழலிலும் பொருந்துமாறும், சொல் குறிக்கும் பொருளை உள்ளடக்கியதாகவும் அமைதல் வேண்டும். இத்தகைய கூறுகளே 'தெளிவுடைமை' எனக் கொள்ளப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, 'Confidential' எனும் சொல்லை நோக்குவோம். இச்சொல் 'மந்தணம்' எனப் பெயர்க்கப்பட்டு, புதிய அலுவலக ஆட்சிச் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது.

### 3.5.7 மொழியாக்கத் திறனை வளர்க்கும் முறைகள்

மொழிபெயர்ப்பைப் போன்றே மொழியாக்கமும் ஓர் அரிய கலையாகும். இக்கலைத் திறனை வளர்க்க இன்றைய பாடத் திட்டத்தில் வழிவகை செய்யப்படவில்லை. பெரும்பாலான ஆசிரியர்கள் மேற்கொண்டுவரும் தமிழ் கற்பிப்பு முறைகளும் மொழியாக்கதிறன் வளர்க்கும் தன்மையில் இல்லை. உயர்நிலைத் திறனாக இத்திறன் வளரும் அடிப்படை மொழியறிவை ஊட்டுதல் தமிழாசிரியர்களின் கடனாகும். இந்நாள் வரை, இத்திறன் வளர்க்கும் வரையறுத்த கற்பிப்பு முறைகள் இல்லாவிடினும், மாணவர்களுக்குச் சொல்லமைப்பு அறிவூட்டுவதாலும். அகராதி, நிகண்டு, சொற்களஞ்சியம் ஆகியவற்றை கையாளும் திறனை வளர்ப்பதாலும் மாணவர்களைச் சொல்லடைவு தயாரிக்கும் பணியில் ஈடுபடுத்தியும் மொழியாக்கத் திறனை வளர்க்கலாம்.

- **சொல்லமைப்பறிவு ஊட்டல்**

மொழியாக்கத் திறன் வளர, மொழியின் சொல்லமைப்பு பற்றிய தெளிவான அறிவுதேவை. நன்னூலில், சொற்களின் அமைப்புகள் பற்றித் தெளிவான கருத்துகள் உள்ளன. பெயரியல், வினையியல் போன்ற பகுதிகளில் சொற்களின் பகுதிகள் விகுதிகள் போன்றன வரையறைப் படுத்திக் கூறப்பட்டுள்ளன.

தமிழிலுள்ள செய்யுள் இலக்கியங்கள் சொற் கருவூலமாகத் திகழ்கின்றன. துறைப்புலம் போகிய புலவர் பெருமக்கள் இலக்கியங்களைக் கவினுறப் படைத்துள்ளனர். அப்படைப்புகளில் புலவர்கள் மேற்கொண்டுள்ள சொல்லாட்சிகள், சொல்லமைப்பு உத்திகள் அனைத்தும் மொழியாக்கத் திறனுக்கு வழிகாட்டுவனவாகும்.

எடுத்துக்காட்டாக,

'வானமே எனக்கு வந்துவந் தோங்கும்

மார்க்கமே மருளர்தாம் அறியா'

எனும் பாடலை நோக்குவோம். இப்பாடலடியில் 'மருளர்' எனும் சொல் 'மருள்' எனும் சொல்லடியாய் பிறந்தது என்பதையும் 'அர்' எனும் விகுதி பெற்று மருளுகின்ற தன்மை உடையவரைக் குறிப்பதையும் மாணவர் அறியச் செய்தல் வேண்டும்.

மாணவர்களின் சொற்களஞ்சிய அறிவு, வெறும் சொற்தொகுதிகளாக மட்டும் அமையாமல், சொல்லின் பகுதி, விகுதி போன்ற உறுப்புகளைப் பற்றிய தன்மைகளையும் கொண்டிருந்தால் புதிய சொற்களை முறையாக உருவாக்கும் திறன் அவர்களிடையே வளரும்.

- **அகராதி, கலைச்சொற் களஞ்சியம், நிகண்டுகளைப் பயன்படுத்தும் பழக்கத்தை ஏற்படுத்தல்:**

தற்போதைய பாடத்திட்டத்தில், அகராதியைப் பயன்படுத்தும் திறனை வளர்த்தல் என்பது நோக்கங்களுள் ஒன்றாகக் குறிக்கப்படினும், மேல்வகுப்புகளில் இத்திறனை வளர்க்கும் வகையில் பாடநூல்கள் தயாரிக்கப்படவில்லை. அகர முதலாக, சொற்கள் நிரல்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. அகராதியைப் பயன்படுத்தும் பழக்கமிருப்பின், ஒரு சொல்லைக் கற்கும் போது, அதோடு சொல்லமைப்பாலும் பொருளமைப்பாலும் தொடர்புடைய பல சொற்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகிறது.

## 3.6 தொகுப்புரை

மொழியின் அமைப்பைப் பொதுவாகக் குழந்தைகள் தாயிடமிருந்தும், பிறர் பேசுவதைக் கேட்டும் கற்றுக்கொள்கிறார்கள். எனவே புதிய செய்திகளை அறிந்து பொருளுணரவும், தற்கருத்து வளர்ச்சிக்கும் கேட்டல் காரணமாகிறது. தமிழ்மொழியைப் பயன்படுத்தும் முறையானது பேச்சுமொழியில் ஒருவகையாகவும் எழுத்துமொழியில் வேறொரு வகையாகவும் கையாளப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு பேசுதல் திறனை வளர்க்க வேண்டும். அச்சிலோ, கையெழுத்திலோ உள்ள செய்திகளைக் கண்ணால் பார்த்து வாயால் உச்சரித்து மனத்தால் பொருளுணர்ந்து படிக்கும் திறனையும் வளர்க்க வேண்டும். ஒருவருடைய எண்ணங்களை வெளிப்படுத்தப் பேச்சு துணை நிற்பதுபோல எழுத்தும் துணை நிற்கிறது; எனவே, எழுதுதல் திறனையும் வளர்க்க வேண்டும். கேட்டு, பேசி, படித்து, எழுதித் தாம் கூற வந்த கருத்துகளைப் பிறர் அறியும்படி கூறும் திறனையும் வளர்க்க வேண்டும். கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படைத்திறன்களுடன் இணைத்துச் சிந்தனைத்திறனை வளர்க்க வேண்டும். இத்திறன்களின் அடிப்படையில் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் இனிமையாகவும், முறையாகவும் பயனுள்ளதாகவும் அமையும்.

| தன் மதிப்பீடு : வினாக்கள் – II |
| --- |
| 1. படித்தல் திறனின் நோக்கம் யாது? |
| 2. படித்தல் திறனை வளர்க்கும் முறைகள் குறித்து எழுதுக. |
| 3. படித்தல் திறனின் பயன்கள் யாவை? |
| 4. படிப்பை மேம்படுத்தும் வழிமுறைகள் குறித்து எழுதுக. |
| 5. எழுதுதல் திறனின் முறைகள் குறித்து எழுதுக. |
| 6. எழுதுதல் திறனின் பயன்கள் யாவை? |
| 7. மொழிபெயர்ப்பின் வகைகள் யாவை? |
| 8. மொழியாக்க முறைகள் பற்றி எழுதுக. |